உ

சிவமயம்



வவுனியாவைப் பிறப்பிடமாகவும்,

இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்.உயர்திரு.

# கணபதிப்பிள்ளை குமாரசேகரம்

அவர்களின் சிவபதப்பேறு

குறித்த

# நினைவு மலர்

30.12.2006

சிவமயம்

# சமர்ப்பணம்

எமது அன்புத் தெய்வத்தின்
திருப்பாதங்களுக்கு
இந்நூல்
சமர்ப்பணம்

மனிதருள் மாணிக்கமாய்
பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் திருவுருவாய்
வெண்ணிற ஆடையணிந்து
கள்ளமற்ற உள்ளத்துடன்
கனிவாகப் பேசி எம்மைப் பேணி
நல்வாழ்வு தந்து இதுவரை துணையிருந்தாய்
இன்று வானுறையும் தெய்வமாய்த் திகழும்
நீங்கள் தொடர்ந்தும் எமக்கு
துணை புரிய வேண்டுமென உங்கள்
திருப்பாதங்களில்
இம்மலரினைக் காணிக்கையாக்குகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இங்ஙனம்
குடும்பத்தினர்

உ
சிவமயம்



## அமரர்.கணபதிப்பிள்ளை குமாரசேகரம்

தோற்றம்: 23.01.1926 மறைவு: 30.11.2006

### திதிவெண்பா

தூயவியவாண்டு துளிர்கார்த்திகை பதின் நான்குதிதி
ஆயப 'ர்வத் தசமி பகல்' நேயமிகு
கணபதிப் பிள்ளைகுமார சேகரச் சீராளன்
நாணப் பிறப்பறுத்தான் நவில்.

# அமரர்.உயர்திரு.

# கணபதிப்பிள்ளை குமாரசேகரம்

## அவர்களின்

# வாழ்க்கைத் தடம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"
- திருவள்ளுவர் -

இயற்கை வளமும் விளைபயிரேற்றமும் ஒருங்கே சேர, செந்தமிழும் சிவநெறியும் சிறப்புற்றோங்கும் ஈழத்தின் வடபால் வரலாற்றுப் புகழ் பெற்ற வளம் கொழிக்கும் நகராக வவுனியா விளங்குகின்றது. தமிழ் மன்னர் அரசாண்ட தனிச்சிறப்பும், வளங்களும் செறிந்து விளங்கும் இயற்கை அழகும், ஆலயங்கள் பல அருளும், தெய்வீகப் பொலிவும் பெற்று மிளிரும் நற்பகுதி இதுவாகும். இங்கே சித்தி விநாயகர் ஆலயத்தின் அருளீட்டத்துடன் மருங்கில் அமைந்த குடியிருப்பு எனும் குறிஞ்சியில் வன்னித் தலைவர் பரம்பரையில் தோன்றியவர் அமரர்.குமாரசேகரம் அவர்கள்.

வவுனியாவிலே உயர்குடிப் பிறந்த திரு.குமாரவேலு வின் மைந்தனாகிய முதலியார் கணபதிப்பிள்ளை அவர்களே அமரரின் தந்தையாராவார். அவரின் தாய்வழிப் பாட்டனார் அக்காலத்தில் யாவரினதும் நன்மதிப்பைப் பெற்ற மாப்பாண முதலியாராவார். அவரது மகள் தையல்நாயகியே அமரர்.குமாரசேகரம் அவர்களின் தாயார் ஆவர்.

குமாரவேலு - தையல்நாயகியின் மூன்றாவது புத்திரனாக 1926ம் ஆண்டு தை மாதம் 23ம் நாள் பிறந்தவர் குமாரசேகரம் அவர்கள். அவருக்குப் பரராஜசேகரன், செகராஜ சேகரம், ஞானசேகரம், கனகசேகரம், பாலசேகரம், கணேச ரத்தினம் என்போர் சகோதரர்களாகவும், தயாளலட்சுமி என்பவர் சகோதரியாகவும் உடன்பிறந்தனர்.

குமாரசேகரம் தனது மாணவப் பருவத்தில் தன் பிறப்பிடமாகிய வவுனியாவிலேயே கல்விபயின்றார். பின்னர் தந்தையார் முதலியார் கணபதிப்பிள்ளை அவர்கள் கொழும்பில் உத்தியோகம் பார்க்கச் சென்றதும் கொழும்பு சென்று சென்ற்.பெனடிக் கல்லூரியில் கல்வி கற்றார். 1941ம் ஆண்டில் கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர (J.S.C) பரீட்சையில் தேர்ச்சி அடைந்தார். பின்னர் கச்சேரியில் எழுதுவினைஞராக சேவையில் சேர்ந்து பணியாற்றினார். சிறிது காலத்தின் பின்னர் மின்சார சபையில் எழுதுவினைஞராகச் சேர்ந்து கொழும்பிலும், பின் சுன்னாகத்திலும் சேவையாற்றினார். பின்னர் 1984 இல் அரசசேவையில் இருந்து ஓய்வுபெற்றார்.

தன் இளம் வய்தில் நொச்சிமோட்டையைச் சேர்ந்த திரு.. திருமதி கார்த்திகேசு அன்னமுத்து தம்பதிகளின் செல்வப் புதல்வி தையல்நாயகியை திருமண்ம் முடித்தார். இவர்களின் இல்லற வாழ்வின் நற்பயனாக நந்தினி என்ற மகளைப் பெற்றொர். குழந்தை பெற்றவேளை தையல்நாயகி அவர்கள் சுகயீனம் காரணமாக மரணித்தார்.

சிலகாலம் கழித்து யாழ்ப்பாணம் இணுவையம் பதியைச் சேர்ந்த முதலித்தம்பி தம்பையா - பொன்னம்மா தம்பதிகளின் அருமைமகள் கனகலட்சுமியை மறுமணம் செய்ததன் மூலம் இல்லற வாழ்வில் பெற்றுக்கொண்ட நல்லறப் பண்பின் பயனாக பெருமையும் சிறப்பும் வாய்ந்த இரு புத்திரர்களான மயூரனையும், மௌலீஸ்வரனையும் பெயர் நிலைக்கவும், பேறு பெருகவும் வாழ்க்கைத் தடங்களில் பதித்துக் கொண்டார். கல்வி, கேள்விகளிலும், தொழில் முயற்சிகளிலும் வழிகாட்டியாக, உறுதுணையாக இருந்த அமரர் அவர்கள் மூத்த மகளை வவுனியாவைச் சேர்ந்த திரு.திருமதி சிவசுப்பிரமணியம் தம்பதிகளின் மகனான வர்த்தகர் கிருபாமூர்த்தி அவர்களுக்கு திருமணம் செய்துவைத்தார். New Kamal Ceramics இல் பணிபுரியும் மூத்த புத்திரனான மயூரனுக்கு தலையாழியைச் சேர்ந்த திரு.திருமதி பாலேந்திரா தம்பதிகளின் மகளான சுகதந்தியைச் திருமணம் செய்துவைத்து மகிழ்ந்து வரும் வேளை சிலகாலம் செல்ல Lucky Video Complex உரிமையாளரான இவரின் கனிஷ்ட புத்திரனான மௌலீஸ்வரனுக்கு இணுவிலைச் சேர்ந்த திரு.திருமதி பாலசுப்பிரமணியம் தம்பதிகளின் மகளான சத்தியகலாவைத் திருமணம் செய்து இல்லறக் கடனின் பெரும் பணிகளில் நிறைவும், அமைதியும் காணலானார்.

மக்களின் நல்வாழ்வின் நற்பேறுகளாக பேரர்கள் வந்து அன்பும், அரவணைப்பும், ஆறுதலும் தேடலானார்கள். உமாசுதன், மயூரன், பிரதீபன், ராகுல், லட்சாஜினி, சங்கீத் ஆகிய பேரர்கள் விளையாடும் தொட்டிலாகி அவர்களை ஆற்றுப்படுத்தவும், ஆறுதல் வழங்கவும், விரும்பியதை தேடி வழங்கி மதிப்பிற்கும், பாசத்திற்கும் வித்தாகி நின்று உயரிய இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

அமரர் அவர்களின் சகோதர, சகோதரியர் கொழும்பில் கல்வி கற்று உத்தியோகங்களிலும், நிர்வாகச் செயற்பாடுகளிலும் சிறந்து விளங்குகின்றனர். நற்குணம் வாய்ந்த மணவாழ்வு கிடைக்கப் பெற்றமையால் சற்புத்திரர் களையும் பெற்று உறவுப் பாலத்துக்கு ஊன்றுகோலாக நிற்கின்றனர்.

அமரர் குமாரசேகரம் 1989ம் ஆண்டில் இணுவிலில் புதுமனை அமைத்து வாழ்ந்தார். 1995ம் ஆண்டில் இலங்கையில் வடபகுதியில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை காரணமாக அமரர் குமாரசேகரம் அவர்கள் தம் பாரியாருடன் தமது பிறப்பிடமான வவுனியாவுக்கு இடம்பெயர்ந்து சென்று அங்கு வாழ்ந்து வந்தார். பின்னர் இலங்கையில் ஏற்பட்ட அமைதி முயற்சி காரணமாக ஏற்பட்ட சுமூகநிலையை அடுத்து மீண்டும் யாழ்ப்பாணம் இணுவிலில் 2002ம் ஆண்டு முதல் தனது வீட்டில் வாழ்ந்து வந்தவேளை ஏற்பட்ட திடீர் சுகயீனம் காரணமாக 2006ம் ஆண்டு நவம்பர் 30ம் திகதி இவ்வுலக வாழ்வைத் துறந்து எல்லாம் வல்ல பார்வதி பரமேஸ்வரரின் திருவடியில் அமைதியுற்றார்.

பெரிய ஆலமர விருட்சமாகப் பலருக்கு நிழல் கொடுத்து, புகழ்பரப்பி, புன்முறுவலோடு யாவருக்கும் அன்பையும், பாசத்தையும் பரப்பி நின்ற குடும்பத் திருவிளக்கு ஒளியிழந்து அமைதி பெற்றிருக்கின்றது. கூடவே இருந்து வழித்துணையாகவும், விளித்துணையாகவும் இருந்து எம்மைக் காத்து நின்ற கரங்கள் இன்று வலுவிழந்து போய்விட்டன. தமது கடமைகளைச் செம்மையுடனும், செழுமையுடனும் நிறைவுசெய்து பரகதிக்கு இட்டுச்சென்ற எமது குடும்பத் தலைவரின் வழிப்படுத்துகை தொடர்ந்தும் தோன்றாத் துணையாக விளங்கும் என்ற பூரண நம்பிக்கையுடன் அவர் நினைவில் என்றும் வாழும் நாம் அவரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திப்போமாக.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

உ

சிவமயம்

# தோத்திரப் பாடல்கள்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் காப்பு

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்
விநாயகனே விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந்
தண்மையினால் கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

சலம்□ வொடு தூபம் மறந்தறியேன்
    தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந் தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
    உன்நாமம் என்நாவில் மறந்தறியேன்
உலந்தார் தலையிற் பலி கொண்டுழல்வாய்
    உடலுள்ளுறு சூலை தவிர்த் தருள்வாய்
அலந்தேன் அடியேன் அதிகைக் கெடில
    வீரட்டானத் துறை அம்மானே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலாமணியே
    அன்பினில் விளைந்தஆ ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
    புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
    செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
    எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

இடர் கெடுத் தென்னை ஆண்டுகொண் டென்னுள்
இருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ
அடல்விடைப் பாகா அம்பலக் கூத்தா
அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுங் கழற உழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான்மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போது அடியின்கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமானே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

ஔவையார் அருளிய

# விநாயகர் அகவல்

ஆசிரியப்பா

1) சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன் அரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்

6) வேழ முகமும் விழங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

11) இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழ நுகரும் மூஷிக வாகன!



16) இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து

21) குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திரமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்

தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்(து)
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து

தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்கிசை நிலையும்

பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்

குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி

47) இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்

51) புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித் தெனக்கருள் செய்து



56) முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி யிரண்டுக் கொன்றிட மென்ன
அருள்தரும் ஆநந்தத் தழுத்தி என் செவியில்

61) எல்லை யில்லா ஆநந் தம்அளித்
தல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவுக் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி

67) வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
72) வித்தக! விநாயக! விரைகழல் சரணே.



உ

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்
## திருவாய் மலர்ந்தருளிய
# திருவெழுகூற்றிருக்கை
## சிவனுருவம்

பண் :- வியாழக்குறிஞ்சி. இராகம் :- சவுராஷ்டிரம்.

திருச்சிற்றம்பலம்.

ஓருரு வாயினை மானாங் காரத்(து)
ஈரியல் பாயொரு விண்முதல் பூதல
மொன்றிய விருசுட ரும்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினை

இருவரோ டொருவ னாகி நின்றனை
ஓரால் நீழ லொண்கழ லிரண்டும்
முப்பொழு தேத்திய நால்வர்க் கொளிநெறி
காட்டினை நாட்டமூன் றாகக் கோட்டினை
இருநதி யரவமோ டொருமதி சூடினை

ஒருதா ளீரயின் மூவிலைச் சூலம்
நாற்கால் மான்மறி யைந்தலை யரவம்
ஏந்தினை காய்ந்த நால்வாய் மும்மதத்(து)
இருகோட் டொருகரி யீடழித் துரித்தனை
ஒருதனு இருகால் வளைய வாங்கி



முப்புரத் தோடு நானில மஞ்சக்
கொன்று தலத்துற வவுணரை யறுத்தனை
ஐம்புலன் நாலாம் அந்தக் கரணம்
முக்குணம் இருவளி யொருங்கிய வானோர்
ஏத்த நின்றனை யொருங்கிய மனத்தோ(டு)

இருபிறப் போர்ந்து முப்பொழுது குறைமுடித்து
நான்மறை யோதி யைவகை வேள்வி
அமைத்தா றங்க முதலெழுத் தோதி
வரன்முறை பயின்றெழு வான்றனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை

அறுபத முரலும் வேணுபுரம் விரும்பினை
இகலிய மைந்துணர் புகலி யமர்ந்தனை
பொங்குநாற் கடல்சூழ் வெங்குரு விளங்கினை
பாணிமு வுலகும் புதையமேல் மிதந்த
தோணிபுரத் துறைந்தனை தொலையா விருநிதி
வாய்ந்த பூந்தரா யேய்ந்தனை
வரபுர மென்றுணர் சிரபுரத் துறைந்தனை
ஒருமலை யெடுத்த இருதிற லரக்கன்
விறல்கெடுத் தருளினை புறவம் புரிந்தனை
முந்நீர்த் துயின்றோன் நான்முக னறியாப்



பண்பொடு நின்றனை சண்பை யமர்ந்தனை
ஐயுறும் அமணரு மறுவகைத் தேரரும்
ஊழியு முணராக் காழி யமர்ந்தனை
எச்சனே ழிசையோன் கொச்சையை மெச்சினை
ஆறு பதமும் ஐந்தமர் கல்வியும்
மறைமுதல் நான்கும்
மூன்று காலமும் தோன்ற நின்றனை
இருமையி னொருமையு மொருமையின் பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை

45) கழுமல முதுபதிக் கவுணிய னறியு
மனைய தன்மையை யாதலின் நின்னை

47) நினைய வல்லவ ரில்லைநீ ணிலத்தே.

திருச்சிற்றம்பலம்.



உ

சிவமயம்

## திருவாசகம்

திருப்பெருந்துறையில் அருளிய

சிவபுராணம்

(சிவனது அநாதிமுறைமையான பழைமை)

கலிவெண்பா

திருச்சிற்றம்பலம்.

நமச்சிவாய வாஅழ்க! நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்(று) அண்ணிப்பான் தாள்வாழ்க

ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகங் கெடுத்(து) ஆண்ட வேந்தனடி வெல்க (6)

பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க (10)

ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி (16)



சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால் (17)
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல்இறைஞ்சி (22)
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய்! விளங்கொளியாய்! (23)
எண்இறந்(து) எல்லை இலாதானே! நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா(று) ஒன்றறியேன்! (25)

புல்ஆகிப் பூடாய்ப் புழுவாய் மரம்ஆகிப் (26)
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்

செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்(து) இளைத்தேன் எம்பெருமான்! (31)
மெய்யேயுன் பொன்னடிகள் கண்(டு) இன்று வீடுற்றேன்: (32)
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா! விமலா! விடைப்பாகா! வேதங்கள்
ஐயா, எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே! (35)
வெய்யாய்! தணியாய்! இயமான னாம்விமலா (36)
பொய்யா யினஎல்லாம் போய்அகல வந்தருளி
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே!
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே! (40)
ஆக்கம் அளவிறுதி இல்லாய்! அனைத்துலகும் (41)



ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய்! சேயாய் நணியானே!
மாற்றம் மனங்கழிய நின்றமறை யோனே! (45)
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச் (46)
சிறந்(து)அடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்!
நிறங்கள் ஓர் ஐந்துடையாய்! விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை (50)
மறைந்திட மூடிய மாய இருளை (51)
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்(து) எங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை

மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா! உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்(து) உள் உருகும்
நலம்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயா ஆன தத்துவனே (61)
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே! (62)
தேசனே! தேனார் அமுதே! சிவபுரனே
பாசமாம் பற்(று) அறுத்துப் பாரிக்கும் ஆரியனே!
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே! (66)
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே! (67)



ஓராதார் உள்ளத்(து) ஒளிக்கும் ஒளியானே!
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே!
இன்பமுந் துன்பமும் இல்லானே! உள்ளானே! (70)
அன்பருக்(கு) அன்பனே! யாவையுமாய் அல்லையுமாம் (71)
சோதியனே! துன்இருளே! தோன்றாப் பெருமையனே
ஆதியனே! அந்தம் நடுவாகி அல்லானே!
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே!
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே! நுணுக்கரிய நுண்ணுணர்வே (76)
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே! (77)
காக்குமெங் காவலனே! காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற

தோற்றச் சுடர் ஒளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே! தேற்றத் தெளிவே! என் சிந்தனையுள்
ஊற்றான உண்ஆர் அமுதே! உடையானே! (83)
வேற்று விகார விடக்(கு) உடம்பின் உள்கிடப்ப (84)
ஆற்றேன் எம் ஐயா! அரனே! ஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே!
நள்இருளில் நட்டம் பயின்(று) ஆடும் நாதனே! (89)
தில்லையுள் கூத்தனே! தென்பாண்டி நாட்டானே! (90)
அல்லற் பிறவி அறுப்பானே! ஓஎன்று
சொல்லற்(கு) அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்



சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்
பல்லோரும் ஏத்தப் பணிந்து. (95)

திருச்சிற்றம்பலம்.

## திருவாசகச் சிறப்பு

### வெண்பா

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளை நீக்கி
அல்லலறுத்(து) ஆநந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம் என்னும் தேன்.

உ

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய

## <u>போற்றித் திருத்தாண்டகம்</u>

*திருக்கயிலாயம் ~ அருச்சனை*

திருச்சிற்றம்பலம்.

1) வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி ஆங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்கும் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.



2) பிச்சாடல் பேயோ டுகந்தாய் போற்றி
பிறவி யறுக்கும் பிரானே போற்றி
வைச்சாடல் நன்று மகிழ்ந்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரமூன்று மெய்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாக மசைத்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

3) மருவார் புரமூன்று மெய்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி யென்னைப் படைத்தாய் போற்றி
உள்ளாவி வாங்கி யொளித்தாய் போற்றி

திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி யோடும் முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

4) வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கும் உடலே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்குந் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீ யாட லுகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.



5) ஊராகி நின்ற உலகே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி யெங்கும் பரந்தாய் போற்றி
பெயராதென் சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவி யான நிழலே போற்றி
நேர்வா ரொருவரையு மில்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

6) சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவரறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி

பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி
பற்றி யுலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

7) பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்துஞ்சொல் லானாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனுந்தீ யானாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.



8) இமையா துயிரா திருந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
உமைபாக மாகத் தணைத்தாய் போற்றி
ஊழியே ழான வொருவா போற்றி
அமையா வருநஞ்ச மார்ந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
கமையாகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

9) மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர்தொழுந் தேவே போற்றி
சென்றேறி யெங்கும் பரந்தாய் போற்றி

ஆவா அடியேனுக் கெல்லாம் போற்றி
அல்லல் நலிய அலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

10) நெடிய விசும்பொடு கண்ணே போற்றி
நீள அகல முடையாய் போற்றி
அடியும் முடியு மிகலிப் போற்றி
அங்கொன் றறியாமை நின்றாய் போற்றி
கொடிய வன்கூற்றம் உதைத்தாய் போற்றி
கோயிலாய் என்சிந்தை கொண்டாய் போற்றி
கடிய உருமொடு மின்னே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.



11) உண்ணா துறங்கா திருந்தாய் போற்றி
ஓதாதே வேத முணர்ந்தாய் போற்றி
எண்ணா இலங்கைக்கோன் தன்னைப் போற்றி
இறைவிரலால் வைத்துகந்த ஈசா போற்றி
பண்ணா ரிசையின்சொற் கேட்டாய் போற்றி
பண்டேயென் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணா யுலகுக்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

திருச்சிற்றம்பலம்.

உ

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய
திருத்தொண்டத்தொகை பதிகம்.

திருவாரூர் - பண் - கொல்லிக்கெளவானம்.

திருச்சிற்றம்பலம்.

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில் சூழ்குன்றையார் விறன்மிண்டற் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆருரன் ஆரூரில் அம்மானுக் காளே. (1)



இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தற் கடியேன்
ஏனாதி நாதன்றன் அடியார்க்கும் அடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பற் கடியேன்
கடவூரிற் கலயன்றன் அடியார்க்கும் அடியேன்
மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ் சாறன்
எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கும் அடியேன்
அலைமலிந்த புனல்மங்கை ஆனாயற் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. (2)

மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்

மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. (3)

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்
பெருநம்பி குலச்சிறைதன் அடியார்க்கும் அடியேன்
பெருமிழலைக் குறும்பற்கும் பேயார்க்கும் அடியேன்
ஒருநம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்
ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கற் கடியேன்
அருநம்பி நமிநந்தி அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. (4)



வம்பறா வரிவண்டு மணம்நாற மலரும்
மதுமலர்நற் கொன்றையான் அடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்
ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்
நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்
நாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கர்க்கும் அடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. (5)

வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே
மறவாது கல்எறிந்த சாக்கியர்க்கும் அடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டர்க் கடியேன்

கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவார்க்கும் அடியேன்
கடற்காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோன் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. (6)

பொய்யடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்
பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழர்க் கடியேன்
மெய்யடியான் நரசிங்க முனையரையர்க் கடியேன்
விரிதிரைசூழ் கடல்நாகை அதிபத்தர்க் கடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. (7)



கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண் டிருந்த
கணம்புல்ல நம்பிக்கும் காரிக்கும் அடியேன்
நிறைக்கொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்
துறைக்கொண்ட செம்பவளம் இருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்
அறைக்கொண்ட வேல்நம்பி முனையடுவார்க் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. (08)

கடல்சூழ்ந்த உலகெலாங் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி இடங்கழிக்கும் தஞ்சை
மன்னவனாஞ் செருத்துணைதன் அடியார்க்கும் அடியேன்

புடைசூழ்ந்த புலியதள்மேல் அரவாட ஆடி
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கும் அடியேன்
அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. (9)

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்த அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. (10)



மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்
தென்னவனாய் உலகாண்ட செங்கணார்க் கடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்
என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவ லூர்க்கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமைகேட் டுவப்பார்
ஆரூரில் அம்மானுக் கன்பரா வாரே. (11)

திருச்சிற்றம்பலம்.

## விநாயகர் அகவல்
## உரை

இறைவனது எண்ணிறந்த ஆற்றல்களில் இடையூற்றை அடக்கி ஆளும் ஆற்றலும் ஒன்று. அவ்வாற்றல் முனைந்து நிற்க விளங்குபவரே விநாயகக் கடவுள். விநாயகர் பிரணவ மந்திர வடிவினர். ஓங்காரத்துள் அகரம் உகரம் மகரமாகிய சிவம்சக்தி நாதம் அடங்கும். விநாயகர் நாதத்துவம். முருகன் விந்து தத்துவம். இவரது திருவடிகள் ஞானசக்தியும் கிரியாசத்தியும் ஆகும். இவரது பேழை வயிற்றில் உலகமெல்லாம் அடங்கும். ஐந்து கரமும் ஐந்து தொழில்களைச் செய்யும் முக்கண்களும் சூரியன் சந்திரன் அக்கினியைக் குறிக்கும். மும்மதம் ஞானமதம், அறக்கருணைமதம், மறக்கருணைமதம். எல்லா வகையினும் விநாயகர் உருவம் ஞனவடிவம். இவரைப் பிரம்மன், விஷ்ணு, தக்கன், இந்திரன், நளன், சண்முகர்



மன்மதன், ஆதிசேடன், சந்திரன், இராவணன், அகத்தியர், ஔவையார், கபிலர் நம்பியாண்டார் நம்பி முதலியோர் வழிபட்டு இட்டசித்தியடைந்தனர். "கணபதி பூசை கைமேற் பலன்" என்பது பழமொழி. விநாயகரை வழிபட்டுத்தான் எல்லாக் காரியங்களையும் பூசைகளையும் விழாக்களையும் தொடங்குவது நம் நாட்டு மரபு. விநாயக வணக்கத்துடனேயே எல்லா நூல்களும் இயற்றப்பெறும். எதையும் எழுதத் தொடங்கும் முன் பிள்ளையார் சுழியிட்டு எழுதும் பழக்கமும் தொன்று தொட்டு வந்துள்ளது.விநாயகர் வழிபாட்டினை எளிதாக யாவரும் செய்யலாம். இரு கைகளாலும் தலையைக் குட்டிக் கும்பிடுதலும், இருகைகளையும் மாற்றி இருகாதுகளைப் பிடித்துக் கொண்டு தோப்புக்கரணம் இட்டு வணங்குதலும் விநாயகர் முன் செய்யப்படும் சிறப்பு வழிபாடாகும்.

சுந்தரமூர்த்தி நாயனாருடனே கைலாசத்துக்குப் பரமசிவனுடைய சந்நிதானத்தில் ஆதியுலா அரங்கேற்ற எழுந்தருளும் சேரமான் பெருமாள் நாயனார் 'ஔவையாரை அழையாமல் வந்து விட்டோம்' என்று நினைத்தார். அது விநாயகரைப் பூசித்துக் கொண்டிருந்த ஔவையாருக்குத் தெரிந்து தானும் அவர்களுடனே கூடக் கைலாசத்திற்குப் போக வேண்டுமென்ற விருப்பங்கொண்டு துரிதமாய்ப் பூசைசெய்தார். விநாயகர் ஔவையாரைப் பார்த்து 'ஔவையே! நீ

ஆறுதலாகப் பூசையைச் செய்; நீ அவர்களுக்கு முன்பே போய்ச் சேருமாறு செய்கிறேன் என்றார். அப்படியே அவர் ஆறுதலாகப் பூசை செய்து இந்த அகவலைத் தோத்திரமாகப் பாடியருளினார். அப்போது விநாயகர் தாம் சொன்னபடி விசுவரூபமெடுத்துத் தமது துதிக்கையினால் ஔவையாரைக் கைலாசத்திற் சேர்த்தார்.

பின்பு அங்கு வந்து சேர்ந்த சேரமான் பெருமாள் நாயனார் “பாட்டி, எப்படி எங்களுக்கு முன்னே இங்கு வந்து சேர்ந்தாய்? ” என வினாவியபோது அவரைப் பார்த்து ஔவையார் கூறிய செய்யுள்:-

”மதுர மொழிநல் லுமையாள் புதல்வன் மலர்ப்பதத்தை
முதிர நினையவல் லார்க்கரி தோமுகில் போல்முழங்கி
அதிர நடந்திடும் யானையும் தேரும் அதன் பின்வரும்
குதிரையும் காதம், கிழவியும் காதம், குலமன்னனே”

என்பது கர்ணபரம்புரை வரலாறு.



1-5. (பொழிப்புரை) : குளிர்ச்சி பொருந்திய நறுமணக் கலவைச் சாந்தணிந்து செந்தாமரை மலர் போலும் அழகிய திருவடிகளில் அணிந்துள்ள சதங்கை என்னும் அணிகலம் பலவகையான இசையொலிகளை எழுப்பவும், பொன்னாலாகிய அரைஞாண் என்னும் அணிகலனும், பூவேலை செய்யப்பட்ட வெண்பட்டாடையும் அழகிய திரு இடையில் பொருந்தி அழகுடன் ஒளி வீச, பெட்டி போன்று திருவயிறும் மிக்க கனமுடைய ஒற்றைத் தந்தமும்.

களபம் :- நறுமணக் கலவைச் சாந்து; பூந்துகில் :- அழகிய பட்டு; வன்னமருங்கு :- அழகிய இடை; பேழை :- பெட்டி; கோடு :- தந்தம்.

6-10. (பொழிப்புரை) : யானைமுகமும் பிரகாசிக்கும் சென்னிறப் பொட்டும், ஐந்து திருக்கைகளும், அவைகளுள் இரு கைகளில் இருக்கும் அங்குசம் பாசம் என்னும் இரண்டு ஆயுதங்களும், மனத்தில் எப்போதும் தங்கித் தோன்றும் நீலநிறம் பொருந்திய திருமேனியும், தொங்குகின்ற வாயும், நான்குபெருந்

தோள்களும், சூரியன், சந்திரன், அக்கினியாகிய மூன்று திருக்கண்களும், கன்னமதம் கபோலமதம் கோசமதம் ஆகிய மூன்று மதங்களும் பொழிவதனால் உண்டான தழும்புகளும்.

(கு-ரை) : "நாலிருபுயம்" எனப் பாடங்கொண்டு "எட்டுப்புயங்கள்" என்றும் கூறுவர். "பவளமால்வரைப் பணைக்கை போந்தனைய, தழை செவி எண் தோட்டலைவன் றந்தை" - திருவிடை மருதூர் மும்மணிக்கோவை (செ.16) சிந்தூரம் - குங்குமதிலகம்; நாலுன்ற - தொங்கிய; நாலிருபுயம் - நால் + இரும் + புயம் - நான்கு பெருந்தோள்; இருமை - பெருமை.

11-15. (பொழிப்புரை) : இரண்டு காதுகளும் சிரத்தில் விளங்கும் பொன்னாலாகிய கிரீடமும் மூன்று புரிகளைச் சேர்த்து முறுக்கேற்றிய மூன்றுவடமாகிய பூணூலணிந்த ஒளிவிளங்கும் மார்பும், சொல்லப்படுகின்ற ஆறு ஆதாரங்களுக்கும் அப்பாற்பட்ட துரிய நிலையின் கண்ணேயுள்ள மெய்ஞ்ஞான அற்புத சொரூபமாக நிலைபெற்ற கற்பகதருப்போல் அடியார்க்கு வேண்டும் வரங்களை அருளும் ஆனைமுகப் பெருமானே! வாழை, மா, பலா, ஆகிய முப்பழங்களையும்



உண்ணும் பெருச்சாளியை வாகனமாகக் கொண்டவரே!

(கு-ரை) : "பொற்புற விளங்கும் பொருளே! கயிலை அற்புதன் ஈன்ற
கற்பகக் களிறே."

எனவும் பாடபேதம் உளது. இப்பாடத்துக்கு, கயிலை அற்புதன் + சிவன், கற்பகக்களிறே + கற்பகம் போலும் களிறு :மூஷிகம் - பெருச்சாளி.

பெருச்சாளி வாகனம் ஆணவ மலத்தினையும், அதனை வாகனமாகக் கொண்டு ஊர்தல் ஆணவ மலத்தின் வலியை அடக்கி அருளுதலையும் குறிக்கும். "முப்பழம் நுகரும்" என்பது மூத்தபிள்ளையாரின் வினையாகிய அடை மொழி.

16-20. (பதவுரை) : இப்பொழுது என்னை ஆட்கொள்ள வேண்டி - இக்காலத்தில் என்னை வேறு சார்பற்ற அடியவனாக ஏற்று அருளும் பொருட்டாக எனக்கு தாயாய் - முன்னமே எனக்குத் தாய்போலக் கருணை செய்து நன்னெறிகட் செலுத்தி, மாயாப் பிறவி மயக்கம் அறுத்து திருந்திய - காரண காரிய முறையில் அநாதியாகத் தொடர்ச்சியுற்று ஒழியாது வரும் பிறப்பைப் பொருந்தி நிலையில்லாத உலக இன்பங்களை நிலையுள்ளனவாகக் கருதி மயங்கி உழலும்

பற்றினை ஒழித்துத் திருந்தும் பரிபக்குவ நிலையை யான் பெறும் பொருட்டு, முதல் - அதற்குரிய ஆரம்ப சாதனமாக, ஐந்தெழுத்தும் தெரிவாப் பொருந்த - ஸ்ரீ பஞ்சாட்சர மந்திரத்தின் துணை கொண்டு செய்யப்படும் சரியை கிரியை யாதி வழிபாடுகளை ஒருமையுடன் பொருந்தும் படி, என் உளந்தனில் வந்து புகுந்து எழுந்தருளி - அடியேனது சித்தத்தில் முறையே தோன்றாமல் நின்றும் தோன்றியும் (விசேட சாந்நித்தியமாகியும்) குடிகொண்டு அருள் செய்து உதவி.

(கு- ரை): "இப்பொழுது என்னையாட்கொள வேண்டி" என்றது உலகப் பற்றற்றுச் சிவபக்தி மேலிட்ட மெய்யடியவனாக ஆட்கொள்ளுதற் பொருட்டு என்றபடி. "எனக்குத் தாயாய்" என்றது அந்நிலைமையெய்துதற்கு முதற்படியான சாதனமாக பசு புண்ணிய வழிபாடுகளில் ஈடுபடுத்தி என்றபடி. "மாயாப்பிறவி பொருந்த" என்றது அப்பசு புண்ணிய முதிர்ச்சியால் சரியை கிரியையாதி சிவ புண்ணியக் கிரியா மார்க்கங்களை மேற்கொண்டு அவற்றில் ஈடுபடுதலை "என் உளந்தனில் வந்து புகுந்து எழுந்து அருளி" என்றது சரியை வழிபாட்டில் ஈசன் செவ்வனே தோன்றாமல் நின்றும், கிரியையாதி வழிபாட்டில் மந்திர ரூபமாதிய விசேட தோற்றங் கொண்டும் சித்தம் குடிகொண்டு அருளுதலை



'தாயாய்', ஏன்பதில் 'ஆய்' : உவமவுருபு. இறைவற்குத தாயை ஒப்புக் கூறியது கொண்டு, அதற்கு ஏதுவான உவமேய தர்மமாக 'கருனை செய்து நன்னெறியிலே செலுத்தி, என்பது ஆற்றலால் வருவித்துரைக்க நின்றது. பொருள் இனிது விளங்குதற் பொருட்டு, காரண காரிய முறையில் மொழிகளை நிலை மாற்றிக்கொண்டு கூட்டிப் பொருள் உரைக்கப்பட்டது.

'திருந்திய' :- 'திருந்தும்பொருட்டு' மலபரிபாகமுஞ் சத்திநிபாதமும் எய்தும் பொருட்டு: காரியப் பொருட்டாய 'செய்யிய' என்னும் வாய்ப்பாட்டு எதிர் கால வினையெச்சம்: இது 'அருளி' என்னும் காரண வினையைக் கொண்டு முடிந்தது, 'வந்து' புகுந்து, எழுந்து என்பன 'அருளி' என்பதற்கு அடையாய் நின்ற இடைப்பிறவரல் மொழிகள். "அவனருளாலே அவன்றாள் வணங்கி" என்பவாகலின், அந்நெறிப்பாட்டொழுகலாறுகட்கு "தாயாய்" "அருளி" என்ற பதங்களால், இறைவனது திருவருட்டுணை சாதனமாய் நின்று உதவியமை குறிப்பிடப்பட்டது. அருளி - அநுக்கிரகஞ் செய்து, உதவிசெய்து "கிரியையென மருவுமவையாவும் ஞானங்கிடைத்தற்கு நிமித்தம்" என்பவாகலின், இவ்வடிகளால் (16-20) ஞானபாத

நிலைக்குச் சாதனமாய் முற்பட்ட சரியை கிரியையாதி தவவொழுக்கச் சாதனையில் இறைவன் நிறுத்தி உயிர்க்கு அருள்புரிந்து உதவுமாறு கூறப்பட்டது.

இனிவரும் "குருவடிவாகி" (21-ம் அடி) என்பது முதலாகத் "தத்துவநிலையைத் தந்தெனையாண்டவித்தக" (71-72 அடி) என்பது வரையுள்ள அடிகளால், இறைவன் ஞானகுருவாக வந்து ஆட்கொண்டு ஞானோபதேசஞ் செய்து ஞானபாதமார்க்க நிலையில் நிறுத்தி அருள் புரிந்தமை கூறப்படுகின்றது என்க.

21-25. (பதவுரை): குவலயந்தன்னில் குருவடிவாகி --(யான் முன்னர்க் கிரியா மார்க்கங்களில் நின்று செய்த பதிபுண்ணிய முதிர்ச்சியினாலே) இப் பூவுலகில் ஞானாசாரியராக எழுந்தருளி. திரம் இது பொருள் என மகிழ்ந்து - ஸ்திரமான (உறுதிப்பாடான) பரிபக்குவ நிலைக்குரிய இத் தீட்சை (நிர்வாண தீட்சை) செய்யத்தக்க காரியமாகும் என்று உவந்து உட்கொண்டு, திருவடி வைத்து - என் தலைமீது திருவடிகளைச் சூட்டி, வாடா வகை எனக்கு அருளி - இனிப் பிறவியெடுத்து வருந்தா வகைக்குரியதான நிருவாண தீட்சையைச் செய்தருளி, கோடு ஆயுதத்தால்



கொடுவினை களைந்து - புருவங்கள் மேலேறி வளைதற்கேதுவான (கண்கள் அகலமுற்று விரிய விழித்து நோக்கும்) திரு நோக்கமாகிய கருவியினால் கொடிய சஞ்சித கன்மங்களை எரித்தழித்து, உவட்டா உபதேசம் என் செவியில் புகட்டி - தெவிட்டாத உபதேசப் பொருள்களை என் செவியாற் கேட்டுணரப் போதித்து.

(கு-ரை) : திரம் - உறுதிப்பாடு, இங்கே உறுதிப்பாடு பொருந்திய பரிபக்குவ நிலைக்குரியது என்னும் பொருட்டாய் 'இது' எனச்சுட்டப்பட்ட நிருவான தீட்சைக்கு அடையாய் நின்றது: ஸ்திரம் என்ற வடசொல்லின் திரிபு. நிருவான தீட்சையானது பிறவியை ஒழித்து வீடுபேற்றினைக் கொடுக்குந் தன்மையாதலின் "வாடாவகை" எனப்பட்டது. வாடாவகை -இனிப் பிறவியில் உழலாத வகைக்குரிய கிரியை (சம்ஸ்காரம் - சடங்கு) : அது நிருவாண தீட்சையாகும். நிருவாணம் - வீடுபேறு. அதனைப் பயக்கும் தீட்சை நிருவாண தீட்சை. அது சத்யோ நிருவாண தீட்சை, அசத்யோ நிருவாண தீட்சை என இருவகைப்படும். உமாபதி சிவாச்சாரியார் பெற்றான் சாம்பனுக்குச் செய்தருளிய தீட்சை சத்யோ நிருவாண தீட்சை. அது தீட்சை செய்து முடிந்த உடனே வீடுபேற்றைப் பயப்பது.

(ஸத்ய := உடனே, ஸத்ய + நிருவாண தீட்சை - ஸத்தியோ நிருவாண தீட்சை: வடமொழி விதிபற்றிப் புணர்ச்சிபெற்ற தொடர் மொழி.) அத் தன்மையதல்லாதது அசத்யோ நிர்வாண தீட்சை' (அ+ஸத்யயே நிர்வாண தீக்ஷை - அஸத்யோ நிர்வாண தீக்ஷை). அஃதாவது, ஞானாசாரியரிடத்தே அத்தீட்சையையும் உபதேசங்களையும் பெற்ற பின்பும், எவருக்குச் சிலகாலம் இவ்வுடலோடு வாழ்ந்து அநுபவிக்கவேண்டிய பிராரத்தவினை இருக்குமோ, அப்படிப்பட்டவர்க்கு அதுர செய்யப்படுவதாகும். மாணிக்கவாசக சுவாமிகள் பெற்ற தீட்சை அப்படிப்பட்டது.

26-30. (பொழிப்புரை) : தெவிட்டுதல் இல்லாத தெளிவு பொருந்திய ஞானத்தையும் அநுபவத்திலே காணச்செய்து, ஐம்பொறிகளும் விடயாதிகளிற் செல்லாமல் தடைப் படுத்தும் தந்திரத்தைப் பேரருட்டிறத்தால் இனிமையாக எனக்குத் தெரிவித்து, தத்துவங்கள் புறத்தே உலக விடயங்களிற் செல்லாது தியான நிலைக்குச் சாதனமாக உண்முகப்பட்டு ஒடுங்குதற்குரிய வழிவகைகளை அடியேன் தெளிய அறிவித்து, ஆகாமியமாகிய நல்வினை தீவினைகள் என்னைத் தொடராமற் கெடுத்து ஆணவமாகிய இருண்மலத்தையும் வலிகெடச் செய்து



(கு - ரை) : தெவிட்டுதல் - வெறுத்தல்: இருவினை - பிராரத்தமும் ஆகாமியமும். சஞ்சிதவினை தீக்ஷையால் ஒழிக்கப்பட்டமையின், ஈண்டு " எல்லாமவன் செயல் " என்ற உணர்ச்சிவழி யொழுகலாற்றால் ஆகாமிய வினை உயிரைப் பற்றாமல் இறைவனாலொழிக்கப்படுதல் ஈண்டு 'இருவினை' தன்னையறுத்து' எனப்பட்டது.

31-36. (பொழிப்புரை): ஞான பாதத்தின் உட்பிரிவுகளாகிய சரியையாதி நான்கு படிமுறைகளையும் எனக்குத் தந்தருளி, ஆணவம், கன்மம், மாயை, என்னும் மூன்றின் வாசனாமல மயக்கைப் போக்கி, இருகண், இருசெவி, நாசியின் இருதுளை, வாய், எருவாய், கருவாய் என்னும் ஒன்பது வாயில்களுக்குரிய ஐம்புலக் கதவினை ஒப்பற்ற உபதேச மந்திரப் பொருளால் அடைப்பதையும் காட்டி, மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்னும் ஆறு ஆதாரங்களின் மேலாகவுள்ள உயர்ந்த நிலையையும் எய்தும் பெரும் பயனாக நிலைபெறச்செய்து மௌன நிலையிலிருத்தி.

(கு-ரை) : சரியையாதி நாற்பாதங்களும் தனித்தனி உட்பிரிவாக சரியை கிரியை முதல் நான்கு படியாக வகுக்கப்பட்டுள ஆதலின், ஞானத்திற் சரியை, ஞானத்திற் கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம் என்னும் ஞானபாத உட்பிரிவுகள் "தலமொரு நான்கு" எனப்பட்டது.

37-40. (பொழிப்புரை) : இடைநாடிக்குரிய உகரமும் பிங்கலை நாடிக்குரிய அகரமும் ஆகிய ஓரெழுத்து மந்திரத்தையும் தெளிவுபெற விளக்கி அக்கினி கலையான சுழுமுனை நாடியின் முடிவில் விளங்கும் பிரமரந்திரத்தையும் காட்டி, அக்கினி மண்டலம் சூரிய மண்டலம் சந்திர மண்டலம் ஆகியவற்றில் பொருந்தி நிறுத்தப்பட்ட தூணைப் போன்று தூங்கி எழுகின்ற பாம்பு வடிவான குண்டலினியின் நாவால் உணரச்செய்து

மூன்று மண்டலம் - சந்திர, சூரிய, அக்கினி மண்டலங்கள்,
எழுபாம்பு - குண்டலினி.



41-46 (பொழிப்புரை) : குண்டலினி என்னும் சத்தியுடன் கூடியிருக்கும் ஊமையெழுத்தை வாய் திறந்து சொல்லும் மந்திரமாக வெளிப்படையாகக் கூறற்குரியதுபோற் கூறி, மூலாதாரத்திலிருந்து பற்றி எரியும் விந்து என்னும் ஞானக்கனலை பூரக இரேசக கும்பகமென்னும் காற்றால் மேலேறச் செய்யும் கருத்தை அடியேற்கு உணர்த்தி, சித்கனல் சுழுமுனை வழியேறிச் சிரத்திலுள்ள பிரமரந்திர மதிமண்டலம் சார்ந்து ஊறும் அமுதத்தை உண்டாக்கும் நிலையையும், சூரியகலை நடைபெறும் விதத்தையும்,
சந்திரக்கலையின் தன்மையையும் நன்கு வெளிப்படையாகச் சொல்லி.

(கு-ரை) : அஜபா- நாதவடிவாயிருக்கும் குண்டலினிசக்தி சொரூபம். செபிக்க முடியாத ஓரெழுத் தொருமொழி ; அகார உகார மகார விந்து நாதஞ் சேர்ந்த பிரணவமாகிய ஓசையில்லா அஞ்செழுத்தாகிய ஊமை எழுத்து என்றும் கூறுவர்; கால் - காற்று; குமுதசகாயன் - சந்திரன்.

47-50. (பொழிப்புரை) : நாபி, இருதயம், கண்டம், புருவமத்தி, நெற்றிநடு, நெற்றியின் மேற்பாகம், உச்சி, உச்சியின் பின் முதலிய பதினாறு கலைகளின் நிலைகளையும், உடம்பிலுள்ள சக்கரங்களின் உறுப்புக்களையும் தெரிவித்து, அறுவகைப்பட்ட தூலகலைகளும் நால்வகைப்பட்ட சூக்கும கலைகளும் தியான மூலமாக இனிமையான இன்பநிலை எனக்குண்டாகும்படி அருளி.

(கு-ரை) : இடைச்சக்கரம் - பிராசாத மந்திரம். இடைச்சக்கரங்கள் ஆவன:- சகஸ்ராரம் 1: ஆதாரம் 6: லலாடபிந்து 1: அர்த்தசந்திரன் 1: நிரோதினி 1: நாதம் 1: நாதாந்தம் 1:சக்தி 1: வியாபினி 1: சமனா 1: உன்மனா 1

உடற்சக்கரம் - உடலாகிய இயந்திரம்; உடற்சக்கரத்தின் உறுப்புக்களாவன :-ஆதாரசக்கரம் 6: சூரியசந்திரகலை 2.

உடலானது உறுப்புக்கள் பலவற்றால் இயங்கும் சக்கரம் போலுளது.

சகுணம் - பருமை; இது ஆறு அளவினதாகும்.

நிர்க்குணம் - நுண்மை; இது நான்கு அளவினதாகும்.



51-55. (பொழிப்புரை) :- சூக்கும தேகத்தின் தன்மை எனக்குப் புலனாகும்படியாக, ஆராய்ந்த ஆறு ஆதாரங்களும், நிராதாரமும், மீதானமும் ஆகிய எட்டு நிலைகளையும் அறியச்செய்து மனத்தினைப் பிரமரந்திரத்தில் பொருந்தியொடுங்க வைத்து சாலோக பத முத்தி நிலையைச் சிறியேனுக்கருளி, என்னை யான் அறியும் அருளையும் புரிந்து.

(கு-ரை) :- புரியட்டகாயம் - சூக்கும சரீரம்; அதாவது, பூதம் 5, தன்மாத்திரை 5, ஞானேந்திரியம் 5, கன்மேந்திரியம் 5, அந்தக்கரணம் 4, குணம் 1, பிரகிருதி 1, கலாதி 5 ஆகிய எட்டுக் கொத்துக்களுடன் கூடிய பரசரீரம் (அதாவது அதிசூக்கும தேகம்) ; கபாலவாயில் - பிரமரந்திரம்.

56-60. அநாதிகாலந்தொட்டு வரும் வினைகளை யெல்லாம் வேரோடு பிடுங்கியெறிந்து, வாக்கினாற் சொல்லுதற்கும் மனத்தினால் நினைத்தற்கும் எட்டாத மனவொடுக்க நிலையை நிறைவித்து, சிந்தையினைத் தெளிவுறச் செய்து, அறிவு அறியாமை என்னும் இரண்டிற்கும் பிறப்பிடம் ஒன்றே என்று அடியேன் செவியில் திருவருட் பேற்றைத் தரும் இன்பச் செய்தியை அழுந்த உபதேசித்து.

(கு-ரை) : முன்னை வினையின் முதல் - மூலகன்ம மலம். மனோலயம் - மனம் இந்திரியங்களின் வழியால் உலகப் புறப்பொருள்களிற் செல்லாமல் உள்முகமாகி ஒரு வழிப்பட்டு அடங்குதல்.

61-66. (பொழிப்புரை) : வரம்பில்லாத பரமாநந்த சுகத்தை அருளிப் பிறவித்துயரை வேரறுத்துத் திருவருள் நெறியை அநுக்கிரகித்து ஆகாயத்தானமாகிய புருவமத்தியில் சதாசிவமூர்த்தியைத் தியானம் செய்யும் முறையையும் அருளி, இதயக் கமலத்தில் சிவலிங்கமூர்த்தியைப் பூசிக்கும் முறையையும் உபதேசித்து, அணுவிற்கும் நுண்ணிய அணுவாயும் அண்டங்கள் எல்லாவற்றிற்கும் அப்பாற் பட்டுப் பெரிதாயுமுள்ள கணுக்கள் முற்றிச் சுவை நிறைந்த கரும்பாகிய முக்கட் சிவபரம் பொருள் அத்துவிதமாக நிற்கும் நிலையையும் அறிவித்து.

67-72. (பொழிப்புரை) : உருத்திராக்கமணி வடவணி முதலிய திரு வேடமும் திருநீறும் தம் மேனியிற் பொலியத் தாங்கி திருவடிபிரியாச் சிந்தைகொள் மெய்யடியார் குழுவில் என்னைச் சேர்த்து, முத்தி, பஞ்சாட்சரமாகிய அரிய பொருளை சகச



அரியபொருளை சகசநிட்டையாகிய சதாநிட்டை நிலைக்கும்படி உபதேசித்து உண்மை நிலையாகிய சிவயோகத்தை நுகரச்செய்து என்னை அடிமையாக ஆண்டருளிய சமர்த்தரே. ஒப்பாரும் மிக்காரும் இல்லாத முழுமுதலே! அருள் மணம் கமழும் தேவரீரது திருவடிக்கமலங்கட்கே யான் அடைக்கலம்.

அஞ்சக்கரம் - ஐந்தெழுத்து; நெஞ்சக்கருத்தின் நிலை - அநுபவம்; தத்துவநிலை -உண்மைநிலை; வித்தக - சதுரப்பாடு (சாமர்த்தியம்) உடையவனே. சிலம்பு இசை பாடவும்,அரைஞாணும் ஆடையும் அழகெறிப்பவும் பேழைவயிறு முதலியன அற்புதம் (ஆக) நின்ற களிறே. மூஷிகவாகன! வித்தக! விநாயக! நின்கழலே சரண் என முடிக்க.

## திருவெழுகூற்றிருக்கை

### உரை.

திருப்பதிக வரலாறு :- சிவபாதவிருதயர் தமது பூசைக் காலத்திலே தினந்தோறும்பிள்ளையாரது திருப்பதிகங்களைத் தாம் புத்தி முத்திகளைப் பெறுதற்பொருட்டாக ஓதும் நியமம் உடையவராய் இருத்தலையும், திருப்பதிகங்கள் நாளும் பெருகி எண்ணிறந்தனவாகுதலின் அக்கருத்து அவர்க்கு முற்றுப்பெறுதல் அரிதாதலையும் அறிந்த பிள்ளையார், இத்திருவெழு கூற்றிருக்கையைத் திருவாய் மலர்ந்தருளி, தமது பிதாவுக்கு "இதனை ஓதின் எல்லாப் பதிகங்களையும் ஓதிய பலன் சித்திக்கும்" என்று கூறியருளினார், என்பது இதன் வரலாறு.

எழுகூற்றிருக்கை: என்பது சொல்லணி வகையுள் ஒரு வகை அணி அமைந்த செய்யுளாகும். சிறு பிள்ளைகள் விளையாடும் நிலத்தில் ஏழறைபட வகுத்துச் செய்து, முறையானே அறைகளுக்கு உள்ளே புகுந்தும் வெளியே போதந்தும் விளையாடும் தன்மையில் வழுவாமல், ஒன்று முதலாக ஏழிறுதியாக ஏறியும் இறங்கியும் வரும் எண்ணலங்காரம் பொருந்தப்பாடுவது எழுகூற்றிருக்கை எனப்படும்.



"எழுகூற்றிருக்கை" என்ற இவ்வகைச் செய்யுளின் இலக்கணமும் உதாரணங்களும் யாப்பருங்கல விருத்தியிற் கூறப்பட்டுள்ளன.

இப் பதிகப்பாடல் இணைக்குறளாசிரியப்பா என்ற வகையின் பாற்பட்ட ஒரே செய்யுளாகும். ஆயினும், மரபு பற்றிப் பதிகம் எனப்படும்.

1. ஓர் உரு ஆயினை - தத்துவங்கள் யாவற்றிற்கும் அப்பால் சுட்டிறந்து நின்ற தேவரீரே. ஆன்மாக்கட்கிரங்கிப் பஞ்சகிருத்தியங்களையுஞ் செய்யத் திருவுளங் கொண்ட இச்சையால் ஒரு திருமேனியைத் தாங்கியருளினீர்.

(குறிப்பு) : இதனால் சொரூபசிவம் தடத்த வடிவு கொண்டமை கூறப்பட்டது.

1-2. மான் ஆங்காரத்து ஈர் இயல்பாய் - சத்தியை எழுப்பி இரண்டுஞ் சேர்ந்த அம்மையப்பராகிய ஒரு வடிவாய் அதனாலேயே சத்தி சிவம் என்னும் இரண்டு உருவாகி.

(கு-பு) : மான் - சத்தி ; ஆங்காரம் - அதன் எழுச்சி.

2-3. ஒரு விண் முதல் பூதலம் ஒன்றிய இருசுடர் உம்பர்கள்

பிறவும் - பாகுபாடற்று ஒரே பொருளாகவுள்ள ஆகாயமுதல் நிலமீறாகவுள்ள ஐம்புதங்களையும், பருவ காலாதி நடப்புக்கு ஏதுவாகப் பொருந்திய சூரிய சந்திரர் எனும் இருசுடர்களையும், தேவர்களையும் ஏனையவுயிர்களையும்.

4. படைத்து அளித்து அழிப்ப மும் மூர்த்திகள் ஆயினை - படைத்துக் காத்து அழித்தற்குப் பிரமா, விட்டுணு, உருத்திரன் என்னும் மூன்று மூர்த்திகளாகவும் நின்றீர்.

5. இருவரோடு ஒருவன் ஆகி நின்றனை - பிரம்மாவையும் விட்டுணுவையும் முறையே வலப்பக்கத்தினும் இடப்பக்கத்தினும் தோற்றுவித்தும் ஒடுக்கிக் கொண்டும் அவ் விருவரோடு ஏகபாதத் திரிமூர்த்தியாய் எழுந்தருளி நின்றீர்.

6. ஓர் ஆல் நீழல் - ஒப்பற்ற கல்லாலமர நிழலின் கண்ணே.

ஒண் கழல் இரண்டும் -தேவரீரது ஞானமயமாகிய இரு திரு வடிகளையும்.



7. முப்பொழுது ஏத்திய நால்வர்க்கு - காலை,உச்சி,மாலை ஆகிய மூன்று வேளைகளிலும், வணங்கித் தோத்திரஞ் செய்யும் சனகர், சனற்குமாரர், சனாதனர்,சனந்தனர் என்னும் நான்கு முனிவர்களுக்கும்.

7-8. ஒளி நெறிகாட்டினை - சிவஞான நெறியைக் காட்டியருளினீர்.

ஒள்-ஒட்பம்,அறிவு; ஈண்டுப் பரஞானமாகிய அநுபவக்காட்சி ஞானம்.

8. நாட்டம் மூன்றாகக் கோட்டினை - கண்கள் மூன்றாகக்கொண்டு புறவிருளை யகற்றியருளினீர்.

9. இரு நதி அரவமோடு ஒரு மதி சூடினை - பெரிய கங்காநதியுடனும், பாம்புடனும் ஒப்பற்ற பிறைச் சந்திரனையும் சடைமுடியிலே சூடியருளினீர்.

10.ஒரு தாள் ஈர் அயில் மூவிலைச் சூலம் - ஒரு தாளையும் ஈருகின்ற கூர்மையும், மூன்று இலை வடிவினையும் உடைய சூலத்தினையும்.

தாள் - அடிப்பாகமாகிய கைப்பிடிப் பகுதி. ஈர்தல் - அரிதல், ஊடுருவக் குத்திக் கிழித்தல். இலை - தகட்டு வடிவம்.

11.நாற்கால் மான்மறி - நான்கு கால்களையுடைய மான் கன்றினையும்.

11-12 ஐந் தலை அரவம் ஏந்தினை - ஐந்து தலைகளையுடைய ஒரு பாம்பினையும் தரித்தருளினீர்.

12-13. காய்ந்த நால்வாய் மும்மதத்து இரு கோட்டு ஒரு கரி - (முனிவர் அச்சங் கொண்டு காசி விசுவநாதா சரணமென்று உமது ஆலயத்துட் புகுந்த பின்னரும் அவர்களைக் கொல்லும்படி) கோபித்து நெருங்கிய தொங்கும் வாயினையும் மூன்று வகை மதங்களையும் இரு கொம்புகளையும் உடைய ஒப்பில்லாத கஜாசுரனாகிய யானையின்.

ஈடு அழித்து உரித்தனை - வலிமையைக் கெடுத்துக்கொன்று அதன் தோலினை உரித்தணிந்தருளினீர்!

15. நானிலம் அஞ்ச - பெரிய பூவுலகில் வாழ்வோரும் உலக காவலராகிய தேவர்களும் முப்புரத்தசுரர்களின் கொடுமை தாங்கலாற்றாது அஞ்சி முறையிட்டமையால்.



நானிலம் - பூவுலகத்தவர்; ஆகுபெயர்; அஞ்ச - அஞ்சியமையால் காரணப்பொருட்டாகிய 'செய' என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

14. ஒரு தனு - ஒப்பில்லாத மேருமலையாகிய வில்லினை; இருகால் வளைய வாங்கி - இரு முனையும் வளையுமாறு வளைத்து.

15-16. முப்புரத்தோடு தலத்துறவு அவுணரைக் கொன்று அறுத்தனை - முப்புரங்களோடு அவ்விடங்களிலே வாழ்தலையுடைய அசுரர்களைக் கொன்று ஒருசேர எரித்து அழித்தருளினீர்!

முப்புரம் - எவராலும் அழிக்க முடியா அரண் (கோட்டை)களையுடைய மூன்று ஊர்கள்.

17-18. ஐம்புலன் நாலாம் அந்தக் கரணம் முக்குணம் இருவளி - ஐம் புலன்களின் வழியே செல்லும் ஐம்பொறிகளும், நான்கு அந்தக் கரணங்களும், மூன்று குணங்களும், இரேசகம் பூரகம் என்னும் இரண்டு சுவாசங்களாகிய வாயுக்களும்.

18-19. ஒருங்கிய வானோர் ஏத்த நின்றனை - புறவிடயங்களிற் செல்லாமல் தமக்கு வசப்பட்டு அடங்கி ஒரு முகப்பட்ட உணர்வுடைய தேவர்கள் வணங்கித் துதிக்க அவர்கட்கு அருள் புரிந்து நின்றருளினீர்.

இருவளி - உச்சுவாசம் நிச்சுவாசம் எனப்படும் இருவகைச் சுவாச இயக்கங்கள். ஐம்புலன் - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன; ஈண்டு ஐம்பொறி களுக்கு ஆகுபெயர். ஐம் பொறிகள் மெய், வாய், கண், மூக்கு, செவிகள்.

அந்தக் கரணங்கள் - உட்கருவிகள்; அவை மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பன.

முக்குணங்கள் - சாத்துவிகம், இராசதம், தாமதம். ஒருங்குதல் - ஒருவழிப்பட்டு நிற்றல்.

"ஐந்து பேரறிவுங் கண்களே கொள்ள அளப்பருங் கரணங்கள் நான்கும், சிந்தையேயாகக் குணமொரு மூன்றும் திருந்து சாத்துவிகமேயாக" ஒருமுகப்பட்டு நிற்க வழிபடுகின்ற நிலை என்றபடி.

19. ஒருங்கிய மனத்தோடு - ஆர்வமுற்ற ஒன்றிய சிந்தையுடன்.

20. இருபிறப்பு ஓர்ந்து - தாய் வயிற்றிலிருந்து பிறக்கும் பிறப்புக்குரிய ஜாதகர்மம் முதலிய சம்ஸ் காரங்களும் வேதமோதலாதி கர்மாநுட்டானத்துக்குத்



தகுதியை உண்டுபண்ணுகின்ற உபநயன சம்ஸ்காரமுமாகிய இருவகைப் பிறப்புக்குரிய வைதிகச் சடங்குகளை விதிப்படி செய்விக்கப்பெற்று.

முப்பொழுது குறை முடித்து - காலை,உச்சி, மாலையாகிய மூன்று சந்தி வேளைகளில் செய்யவேண்டும் செபம். தர்ப்பணம், அநுட்டானம் ஓமம் என்னும் நித்திய கடமைகளாகிய கருமங்களை நியமமாகக் குறைவறச் செய்து.

21-22 நான்மறை ஓதி ஐவகை வேள்வி அமைத்து நான்கு வேதங்களையும் ஓதி கன்மயாகம், தவயாகம், செபயாகம் (மந்திரயாகம்), தியானயாகம்(பாவனையாகம்) ஞானயாகம், என்னும் ஐந்து வேள்விகளையும் கைக்கொண்டு.

(கு-பு) : "கருமமென்றா தவமென்றா கற்பாற் பயில் மந்திரமென்றா, பரிவால் வரு பாவனையென்றா பரமஞான மென்றா - தெரியும் மகமோரைந்தினையும் (சிவதருமோத்தரம் -3 -வது ஐவகை யாகவியல் - செய். 1) என்பதனால் ஐவகை யாகங்களையுணர்க. இனி,பிரமயாகம், தேவயாகம், பிதிர்யாகம், மானுடயாகம், பூதயாகம் என்பன கோடலுமாம்.

22. ஆறங்கம் முதலெழுத்து ஓதி - சிஷை, கற்பம்,வியாகரணம், நிருத்தம், சந்தோபிசிதம், சோதிடம், ஆகிய ஆறங்கங்களையும் முதனூலாகிய சிவாகமாதி,சாஸ்திரங்களையும் கற்று.

எழுத்து - சாஸ்திரம். முதலெழுத்து - சிவபெருமானால் அருளிச்செய்யப்பட்ட முதனூலாகிய (சிவாகமம் என்னும்) சாஸ்திரம்! 'எண்ணுமெழுத்தும் கண்ணெனத்தகும்" என்புழிப்போல.

23. வரன் முறை பயின்று - யாகங்களை விதிப்படி செய்து

எழு வான்றனை வளர்க்கும் - (உலகம் செழித்து) மேலோங்குதற்கு ஏதுவாகிய பருவ மழையினை மாதம் மும்மாரியாக வேண்டும்போது பெய்விக்கும்
பிரமபுரம் பேணினை - திருப்பிரமபுரத்தினில் விரும்பி எழுந்தருளியிருக்கின்றீர்.

(கு - பு): 'வளர்க்கும்' என்னும் பெயரெச்சம் 'பிரமபுரம்' என்னும் இடப்பெயர் கொண்டது. பருவ மழை தவறாது பெய்வதற்கு ஏதுவாக யாகம் முதலிய அறங்களைக் குற்றமிலராய்ச் செய்வோர் வாழுமிடமாயுள்ளது பிரமபுரம் என்பது கருத்து. பிரமபுரம் - சீகாழித் தலத்திற்கு ஒரு பெயர். பிரமா பரமசிவனைப் பூசித்துப் பேறுபெற்ற ஊர் எனக் காரணப் பெயராய் வழங்குவது.



பின்னர் வரும் வேணுபுரம் முதலாய பதினொரு பெயரும் இதுபோலப் போந்த ஒவ்வொரு காரணப் பெயராகும்.

25. அறுபதம் முரலும் வேணுபுரம் விரும்பினை - ஆறு கால்களையுடைய வண்டுகள் இன்னொலி செய்யும் பூஞ்சோலைகள் செறிந்த வேணுபுரத்தை விரும்பியெழுந்தருளியிருக்கின்றீர்.

26. இகலியமைந்து உணர்புகலி அமர்ந்தனை - (இந்திரன் முதலிய தேவர்கள்) தம்மைப் பகைத்த (சூரபன்மனது) வலியை உணர்ந்து புகலிடமாகப் புகுந்த இடமாகிய புகலியை விரும்பியெழுந்தருளியிருக்கின்றீர்.

(கு - பு) இனி, 'இகலிய மைந்துணர் புகலி' என்பதற்கு 'இகல் இயம் ஐந்து உணர் - வெவ்வேறு வகைப்பட்ட பஞ்சதுந்துபி (ஐவகை வாத்தியங்) களின் ஒலி கேட்கப்படும் (பொருந்திய) புகலி, எனப் பதச்சேதமும் பொருளும் கோடற்கு ஏற்புடைமையும் உணர்க. இயம் - வாத்தியம், இயவகை ஐந்து: தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக் கருவி என்பன.

27. பொங்கு நாற்கடல் சூழ் வெங்குரு விளங்கினை - அலைகள் கிளர்ந்தெழும் உலகின் நாற்புறமுஞ் சூழ்ந்த பெருங்கடலின் அணித்தாகிய வெங்குரு எனப் பெயரிய திருத்தலத்தில் விளங்கி நின்றீர்.

28-29. பாணி மூவுலகும் புதைய மேன்மிதந்த தோணிபுரத்து உறைந்தனை - பூமி, அந்தரம், சுவர்க்கம் ஆகிய மூன்று உலகங்களும் பிரளய வெள்ள நீருள் மூழ்கிய காலத்தில் அதன்மீது தோணிபோல் மிதந்த தலமாகிய தோணிபுரத்தில் வீற்றிருந்தருளினீர்.

29-30. தொலையா இருநிதி வாய்ந்த பூந்தராய் ஏய்ந்தனை - என்றுங் குறையாத சங்கநிதி பதுமநிதி ஆகிய இரு நிதிகளும் பொருந்தி விளங்கும் பூந்தராய் என்னும் பெயர்பெற்ற திருப்பதியில் எக்காலமும் பொருந்தினீர்.

(கு - ரை) சங்கநிதி = 100000000000000 கோடி தொகை

பதுமநிதி = 1000000000000000000000000000000

31. வரபுரம் என்றுணர் சிரபுரத்து உறைந்தனை - வணங்குவார்க்கு வேண்டிய வரமளிக்கும் நகரம் என்றுணரப்படும் சிரபுரம் எனப்பெயரிய தலத்தில்



சதாகாலமுங் கோயில் கொண்டருளினீர்.

32- 33. ஒருமலை எடுத்த இருதிறல் அரக்கன் விறல் கெடுத்து அருளினை - ஒப்பில்லாத கைலாய மலையை எடுத்த பெருவலிபடைத்த இராவணனுடைய செருக்கையடக்கிப் பின் அவன் வணங்கித் துதித்து வேண்ட அவனுக்கு அருள் செய்தீர்.

(கு - பு): இருதிறல் - (தவவலியும், தேகபலம் சேனைப்பலம் அரண்பலமாதி புறவலியுமாகிய) இரு வகை வலியுமாம்.

33. புறவம் புரிந்தனை - அக்கினிதேவன், சிபி என்னும் அரசனது நீதி தருமங்களைச் சோதித்தற்பொருட்டுப் புறாவடிவங்கொண்டு அடைக்கலம் புகுந்தமையால், அப் புறாவுயிரைக்காக்க அவன் தன்னுடலின் தசையை அரிந்து ஈந்தபோது தனக்கேற்பட்ட பாவம் தீர அவ் அக்கினி தேவன் பூசித்த தலமாகிய சீகாழிக்குப் 'புறவம்' எனப் பெயர் வழங்க அருள்புரிந்தீர்.

34 - 35. முந்நீர் துயின்றோன் நான்முகன் அறியாப் பண்பொடு நின்றனை - பாற்கடலில் அறிதுயில் புரிகின்ற விட்டுணுவும் நான்கு முகங்களையுடைய பிரமனும் முறையே அடியும் முடியும் தேடியறிய மாட்டாமல் இளைத்தற்கு ஏதுவாகிய பெருஞ்சோதி வடிவாய் நின்றீர்.

35. சண்பை அமர்ந்தனை - கபிலமுனிவர் சாபங் காரணமாகச் சண்பைப் புல்லாற் பொருதுமடிந்த யாதவ குலத்தார்க்கு நேர்ந்த கொலைப்பழி தம்மைச் சாராமைப் பொருட்டுக் கண்ணன் பூசித்துப் பேறுபெற்ற காரணத்தாற் சண்பை எனப்பெயர் பெற்ற சீகாழியில் அருள்புரிந்து இருந்தருளினீர்.

36 - 37. ஐயுறும் அமணரும் அறுவகைத் தேரரும் ஊழியும் உணராக் காழி அமர்ந்தனை - 'அஸ்தி நாஸ்தி' என்று சந்தேகவாதம் பேசும் அநேகாந்த வாதிகளாகிய சமணரும், (தொகையுண்மை வழக்கு முதலாகிய அறு வகையும் உள்வழக்கு முதலாகிய ஆறும் அழகிய ஆறுவகை வழக்குகளைக் கொண்டு கூறும் புத்தரும் ஊழிக்காலமளவும் தம் நெறியில் தவறாதொழுகினும் உணரமுடியாதபடி, ஸ்ரீ காளிதேவி பூசித்துப் பேறு பெற்றமையாலே சீகாழியெனப்பட்ட திருப்பதியில் எழுந்தருளியிருந்தனை.



(கு - பு): 'ஸ்ரீ காளிப்பதி, என்பது 'சீகாழிப்பதி' என மருவியது.

அறுவகைத் தேரர் - தொகையுண்மை வழக்கு, முதலிய ஆறுவகை வழக்குக்களை எடுத்துக்கூறும் பௌத்தர்.

அறுவகை வழக்கு :- தொகையுண்மை வழக்கு, தொகையின்மை வழக்கு, தொடர்ச்சியுண்மை வழக்கு, தொடர்ச்சியின்மை வழக்கு, மிகுத்துரை யுண்மை வழக்கு, மிகுத்துரையின்மை வழக்கு, என்பன. (சிவ-சித்தி, பரபக்கம் - சௌத் - மதம். செய். 6).

இனி வேறும் ஒரு வகையாய்: உள்வழக்கு, இல்வழக்கு, உள்ளது சார்ந்த உள்வழக்கு, உள்ளது சார்ந்த இல்வழக்கு, இன்மை சார்ந்த உள்வழக்கு, இன்மை சார்ந்த இல்வழக்கு எனவும் ஆறு வழக்குகள் உள்ளன. (சிவ-சித்தி-பரபக்கம்-சௌ.மதம். செ. 10).

38. எச்சன் ஏழிசையோன் கொச்சையை மெச்சினை - வேள்வி உருவனாயும், ஏழிசையுருவனாயும் கொச்சைவயம் எனப்படும் பதியை விரும்பி வீற்றிருந்தருளினீர்.

(கு - பு): கொச்சைவயம் என்பது கடைக்குறை விகாரம் பெற்று நின்றது.

39. ஆறு பதமும் - ஆறு அத்துவாக்களும், ஐந்து அமர் கல்வியும் - கௌசிக முனிவர் முதலிய ஐந்து முனிவர் பொருட்டு சதாசிவமூர்த்தி விரும்பித் தோற்றுவித்தருளிய சிவாகமங்கள் இருபத்தெட்டும்.

(கு-பு): பதம்-வழி. ஆன்மாக்களைப் பரகதி யடைவித்தற்குக் காரணமாகிய வழி என்றபடி; 'ஆறு அத்துவாக்கள், எனப்படும். அவை: மந்திராத்துவா, பதாத்துவா, வர்ணாத்துவா, புவநாத்துவா, தத்துவாத்துவா, கலாத்துவா என்பன. மந்திரம் 11;
பதம் 81; வர்ணம் 51; புவனம் 224; தத்துவம் 36; கலை 5;

கல்வி - ஆகமமாகிய கலை; சிவஞானத்தை பயத்தற்குச் சாதனமாயுள்ள நூல் சிவாகமம். சிவாகமம் 28:- காமிகம் முதல் வாதுளம் இறுதியாக உள்ளவை.

40. மறை முதல் நான்கும் - வேதங்கள் முதல் நால்வகையாக உள்ள (உலகியலறிவுக்கும் வீட்டியலறிவுக்கும் சாதனமான) அட்டாதச வித்தைகளும்.



(கு - பு): அவை: நான்கு வேதங்கள், ஆறுவேதாங்கங்கள், நான்கு உபாங்கங்கள், நான்கு உபவேதங்கள்.

வேதம் 4:- இருக்கு, யசுர், சாமம், அதர்வம்.
வேதாங்கம் 6:- சிஷை, வியாகரணம், சந்தசு, நிருத்தம், சோதிடம், கற்பம்.
உபாங்கம் 4:- மீமாம்சை, நியாயம், புராணம், மிருதி. உபவேதம் 4:- ஆயுள் வேதம் தநுர்வேதம், காந்தர்வவேதம், அர்த்தவேதம்.

42. இருமையின் ஒருமையும் - தேவரீர் உலகுயிர்களோடு கலந்து (வியாபித்து அத்துவிதமாயிருக்குந் தன்மையும். ஒருமையின் பெருமையும் - அங்கனமாயினும், அவையெல்லாம் உம்முள்ளே அடங்க அவற்றைக் கடந்தும் எல்லையில்லாதிருக்கும் ஒரே சிவமாந்தன்மையும்.

41. மூன்று காலமும் தோன்ற நின்றனை. - இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் முக்காலங்களிலும் புலப்பட நின்றருளினீர் .

(கு - பு) இருமையின் ஒருமை - பெத்த நிலையிலும் முத்தி நிலையிலும் இறைவன் அத்துவிதமாகக் கலந்துநின்ற நிலைமை. இறைவனும் உலகுயிர்களும் இரண்டல்லவாய் இறைவன் அவற்றில் தோயாமலே ஒன்றுபட்டுள்ளதன்மை. ஒருமையின் பெருமை - அகண்டாகார சச்சிதானந்த சொருபத்தன்மை.

'ஒருமையின் பெருமையாம்' என்றதன் பின்னே 'மூன்று காலமுந்தோன்ற நின்றனை' என்பதை மாற்றிக் கூட்டிப் பொருள் கொள்க.

'பதமும், கல்வியும், நான்கும், இருமையினொருமையும் ஒருமையின் பெருமையும் + முக்காலத்திலும் தோன்ற நின்றனை, என அந்வயமும் முடிபும் காண்க.

43 - 44. மறுவிலா மறையோர் கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை - குற்றமற்ற பிரமகுலத்தில் உதித்து ஞானப்பாலுண்டு மலநீக்கமும் பெருமை பொருந்திய சிவத்துவப் பேறும் பெற்ற கவுணியர் கோத்திரத்தவனாகிய ஞானசம்பந்தனது கட்டுரையாகிய இப்பாடலை,



(கு - பு): கழுமல - ஆணவம் முதலிய மலங்கள் நீங்கப்பெற்ற, முதுபதி - முதிர்ந்த பதியாகிய சிவமாகுந்தன்மை (சிவத்தோடு அத்துவித முத்தியின்ப நிலை)ப் பேறு பெற்ற, கவுணியன் - கவுணிய கோத்திரத்திலவதரித்தவர். (சம்பந்தமூர்த்தி).

45. கழுமலமுதுபதிக் கவுணியன் அறியும் - கழுமலம் என்னும் பழைய திருப்பதியை விரும்பி எழுந்தருளியிருக்கின்ற, தலைக்கலத்து உண்ணும் இறைவனாகிய நீரே (பத்தியுடன் ஓதி வழிபடுவோரை) அறிந்து அவர்க்குத் திருவருள் புரியத்தக்க.

(கு - பு): கழுமல முதுபதி - கழுமலம் எனப் பெயர் பெற்ற சீகாழியாகிய பழைய ஊர் கவுணியன் (கம் - பிரமகபாலமாகிய தலையோடு உண்ணியன் - பிச்சையேற்றவன்).

46. அனைய தன்மையை ஆதலின், நின்னை - அத்தன்மையாகிய பெருங்கருணையாகும் இயல்பினையுடையையாகலின் தேவரீரை.

47. நினைய வல்லவர் நீள் நிலத்தே இல்லை - (இப் பாடலை ஓதி உம்மை) தியானித்து வழிபடுவோர் நெடுக உளவாம் நிலவுலகத்துழலுங் கதிகளிற் செல்லுதல் இல்லை,
(நினைக்க வல்லவர்களுக்கு மேலும் பிறத்தல் இல்லையாகும்: மோசஷகதி சித்திக்கு மென்றவாறு).

திருச்சிற்றம்பலம்.

# திருவாசகம்
# சிவபுராணம்

## உரை

**1-5. (பொழிப்புரை): நமச்சிவாய என்னுந் திருவைந்தெழுத்து** மந்திரம் வாழ்க! எல்லாவற்றிற்கும் **தலைவனாக** விளங்குபவனின் திருவருட்சக்தி வாழ்க!



கண்ணிமை ஒருகாற் பொருந்தும் ஒருசிறு நேரமும்,என்நெஞ்சினின்றும் அகலாதவனுடைய திருவடி வாழ்க! திருப்பெருந்துறையில் எழுந்தருளி எளியேனை ஆட்கொண்டருளிய குருநாதனான ஞானாசாரியரின் திருவடி வாழ்க! ஆகமங்களின் உட்பொருளாக விளங்கி அணுகி அருள் புரிபவனது திருவடி வாழ்க! ஒருவனாக இருந்தே பல உருவங்களைக் கொள்பவனாய், எப்பொருளினும் தங்குபவனது திருவடி உள்ளத்தில் என்றும் நிலைபெறுக.

(கு-ரை) : நாதன் - தலைவன்; நாததத்துவத்தில் உள்ளவன். கோகழி - திருப்பெருந்துறை. அண்ணிப்பான் - அணுகி நிற்பவன், ஏகன் - ஒருவன். அநேகன் - உயிர்களுக்கு அருளும் பொருட்டுப் பல உருவங்களைக் கொள்பவன்.

6-10. (பொழிப்புரை) : எளியேனது மனவோட்டத்தைப் போக்கி என்னை அடிமை கொண்ட பேரரசனின் திருவடிகள் உயர்ந்து விளங்குக! பிறவியாகிய மரத்தை வேருடன் அறுக்கும் தலைக்கோலம் உடையபெருமானின் கழல் அணிந்த திருவடிகள் வெற்றியுறுக! அன்பில்லாத புற நெறியினர்க்கு எட்டாத தொலைவில் இருப்பவனின் பூப்போன்ற மெல்லிய அழகிய திருவடிகள் வெற்றியுறுக! கைகூப்பி வணங்கும் அன்பர்கள் அகத்தே நினைந்து மகிழ்தற்கு உரிய தலைவனின்

திருவடிகள் வெற்றியுறுக! தலைமேற் கைகூப்பும் அன்பரை உயரும்படி செய்யும் சிறப்புடையவனின் திருவடிகள் மேம்படும்!

(கு-ரை) : வேகம் - மனஓட்டம், அலைவு. பிஞ்ஞகன் - தலைக்கோலம் உடையவன்.புறத்தார் - அன்பில்லாதவர்கள். சேயோன் - தொலைவில் இருப்பவன்

11-16. (பொழிப்புரை) : எப்பொருளையும் ஆள்வோன் திருவடிக்கு வணக்கம். எம் தந்தையின் திருவடிக்கு வணக்கம். ஒளி வடிவினனின் திருவடிக்கு வணக்கம். சிவபெருமானின் சிவந்த அடிக்கு வணக்கம் அன்பர்களின் அன்பில் விளங்கி நிற்கும் குற்றமற்றவனது திருவடிக்கு வணக்கம். வஞ்சகம் மிக்க பிறவித் துன்பங்களை வேருடன் அறுக்கும் அரசனது திருவடிக்கு வணக்கம். சிறப்புமிகுந்த திருப்பெருந்துறையில் தோன்றி எளிவந்த நம்முடைய தேவனின் திருவடிக்கு வணக்கம். நுகர்ந்து தெவிட்டாத பேரின்பத்தை அளித்தருளும் மலைபோன்றவனுக்கு வணக்கம்.

17-22. (பொழிப்புரை) : சிவபெருமானாகிய அவன் என் நினைவின் உள்ளே நிலை பெற இருந்த அத்தன்மையினால், அவனது திருவருளாலே, அவனுடைய திருவடிகளை வணங்கிவந்த வழிபாட்டினாலே நெற்றிக்கண்ணராகிய



அவ்விறைவன் (ஞானாசாரியனாக எழுந்தருளி வந்து, என் மீது திருவருள் நோக்கத்தைச் செய்து அடிமையாகிய என் பழைய வரலாறுகளையும் ஆண்டனாகிய தன்னியல்புகளையும்) காட்டி (உணர்த்தி) யருள, அக்காட்சி ஞானத்தைப் (பெற்றேன்; அங்ஙனம்) பெற்றமையால், யான் பாசஞான பசுஞானங்களுக்கு எட்டாத தூய திருவருளின் வசப்பட்டு நின்று பேரின்பத்துள் அமிழ்ந்தி என் உள்ளம் மகிழும்படியும், முற்பிறவிகளில் செய்ததீவினைகள் முற்றும் நீங்கி ஒழியும் படியும் சிவபுராணம் என்னும் இக்கலிவெண்பாவினை யான் சொல்லித் துதிக்க முற்படுகிறேன்.

(கு-பு) : கண்ணுதலான் - நெற்றியில் கண்ணை உடையவன்.

'சிவனவன் ............ வணங்கி' என்றது; தான் திருவருளின் உதவியால் சரியை கிரியை யோக வழிபாடுகளைச் செய்துவந்த தனது முன்னைத் தவமாகிய காரணத்தை, 'கண்ணுதலான் + வந்த + தன் கருணைக் கண்காட்ட (அக் காட்சி யாகிய திருவருள் திருவருள் ஞானத்தை எய்தினேன்;) எய்தி" என்றது: முன்னைத் தவப்பயனாக இறைவன் ஞானகுருவாய் வந்து தனக்கு நிர்வாணதீஷை செய்து,

திருவருள் ஞானமெனப்படும் சிவஞானத்தை அருள, அதனால், தான் முத்தியின்ப அநுபவநெறி கைகூடப்பெற்றதை, 'எண்ணுதற்கு .............. இறைஞ்சி +சிந்தை மகிழ + முந்தை ..... ஓய+சிவபுராணந்தன்னை+ உரைப்பன் யான்' என்றது: தான் கைகூடப்பெற்ற சிவஞான யோகக் காட்சிப் பேரின்ப அநுபவத்தை இடையறாமல் நுகர்ந்து சிந்தை மகிழும் பொருட்டும் தனக்கு இனியுள்ள பிராரத்த வினைப்பயன்களும் வாசனாமலமும் தன்னைத் தாக்காமல் ஓயும்பொருட்டும் சிவபுராணம் பாடித் துதிக்க லுற்றதை.

காரண காரிய நிகழ்ச்சிக் கிரமத்துக்கு இயைய. 'வணங்கி + கண்ணுதலான் +வந்து + தன் கருணைக் கண் காட்ட +(எய்தினேன்) எய்தி, எண்ணுதற்கு ......... இறைஞ்சி + சிந்தை மகிழ + முந்தை ........... ஓய + சிவ புராணந்தன்னை + உரைப்பன் யான்" எனக் கொண்டு கூட்டுப்பொருள்கோள் (வாக்கிய அந்நுவயம்) கொண்டு பொருள் கூறப்பட்டது.

**வணங்கி, எய்தி:** - காரணப்பொருட்டாய் வந்த 'செய்து' என்னும் வாய்பாட்டு இறந்த கால வினையெச்சம் 'எய்தி' என்பதற்கு, காரண காரிய நிகழ்ச்சிகள் இனிது விளங்குதற் பொருட்டாக, எய்தினேன்: அங்ஙனம் எய்தியமையால் என இரு தொடராக்கிப் பொருள் உரைத்தற்குரிய மரபினை அநுசரித்து உரைக்கப்பட்டது.



மகிழ ஓய :- காரியப் பொருட்டாய் எதிர்காலங்காட்டும் வினையெச்சம். எழில் ஆர் கழல் இறைஞ்சி அழகிய திருவடிக்கீழ் வணங்கியொடுங்கி: என்றது ஈண்டு, தூயதிருவருள் வசப்பட்டுப் பேரின்ப அநுபவத்துள் அமிழ்ந்தித் திளைத்தலை இலக்கணை நெறியாற் குறிக்கும்.

23-25. (பொழிப்புரை) : வானுலகில் நிறைந்து,மண்ணுலகில் நிறைந்து இவற்றிற்கும் மேம்பட்டு அப்பாலாய் நிறைந்தவனே! விளக்கம் மிகுந்த ஒளி வடிவினனே! எண்ணிக்கையின் அளவினையும் கடந்து, முடிவு இல்லாமல் விரிந்து நிற்பவனே! நினது பெருஞ் சிறப்பைதீ வினையை உடைய யான், புகழ்ந்து கூறும்முறை ஒன்றினையும் அறியாதவனாய் இருக்கின்றேன்.

26-31. (பொழிப்புரை) : புல்லாகியும், பலவகைப்பூண்டுகளாகியும், புழுவாகியும், பலதிற மரங்களாகியும், பற்பலவிலங்குகளாகியும், பல்வகைப் பறவைகளாகியும், பாம்புகளாகியும், கற்பாறைகளின்உள்ளாகியும், மனிதர்களாகியும், பேய்களாகியும், பூதக் கூட்டங்களாகியும்,வலிஅசுரர்களாகியும், முனிவர்களாகியும், தேவர்களாகியும் வருகின்ற அசையாப் பொருளும், அசையும் பொருளும் ஆகிய இவைகளினுள்ளே யான் எல்லாப்பிறவிகளினும்பிறந்து .

இளைப்படைந்தேன்

(கு-ரை) : விருகம் - மிருகம். தாவரம் - இயங்காத பொருள். சங்கமம் - இயங்கும்பொருள். எம்பெருமான்' என்பது மேல்வருந் தொடரோடுகூட்டி உரைக்கப்பட்டது.

31-35. (பொழிப்புரை) : எங்கள் பெருமானே! நிலைபெற்ற பேரின்பமடைவதற்கு ஏதுவாகிய உனது அழகிய திருவடிகளைக் காணப்பெற்று இற்றைக்கு பாச நீக்கத்தினை அடைந்தேன் யான் ஈடேறும்படி என் உள்ளத்தின் உள்ளே ஓம் என்னும் வடிவமாய் நின்ற மெய்ப்பொருளே! குற்றமற்றவனே! இடபத்தை ஊர்பவனே! வேதங்கள், தலைவனே! என்று துதிக்க, மேல் உயர்ந்தும் கீழ் ஆழ்ந்தும், அவற்றிற்கு எட்டாமல் அகன்று நுண்ணியனாய் இருப்பவனே!

36-40. (பொழிப்புரை) : வெம்மை உடையவனே! குளிர்ச்சி உடையவனே! வேள்வி வேட்கும் தலைவனின் உள்ளத்தில் விளங்கும் தூயவனே! பொய்யாகியவை அனைத்தும் அகன்று போகும்படி குரு வடிவில் வந்து அருள் செய்து உண்மை



அறிவாகித் திகழ்கின்ற நிலையான பேரொளியே! எந்த வகையான அறிவும் இல்லாத எளியேனுக்கு இன்பத்தைத் தந்தருளிய பெருமானே! அறியாமையை நீங்கச் செய்கின்ற நல்ல அறிவாக இருப்பவனே.

(கு-ரை) : வெய்யாய் - வெப்பம் மிக்கவனே.தணியாய் குளிர்ச்சி வாய்ந்தவனே இயமானன் - எசமானன், தலைவன்: (வேள்வி - யாகம்) இயமானன்- 'உயிர்' எனினுமாம் : அத்துவிதகடஷ் கலப்பால் வியாபித்து உயிர்க்குயிராய் நின்று இயங்கும் நின்மலன் என்றபடி;

41-45. (பொழிப்புரை) : ஆக்கப்படுதலும், ஒரு கால அளவில் நிற்றலும் முடிதலும், இல்லாதவனே! எல்லா உலகங்களையும் நீயே படைப்பாய்! காப்பாய்! அழிப்பாய்! மலபரிபாகம் வரும் வரைக்கும் உயிர்களைப் பலவகைப் பிறவிகளிற் செலுத்துவாய்! நீயே முடிவில் உயிர்களுக்கு அருளையும் தருவாய்! அவ்வருட் பேற்றின் பொருட்டு என்னை நினது திருவடித் தொண்டில் புகும்படி செய்வாய்! மலரின் மணம் போல் எங்கும் வியாபகமாய் இசைந்திருப்பவனே! அன்பில்லாதவர்களுக்கு அடைதற்கு அரியவனே! அன்பர்களிற்கு எளியவனே! சொல்லுக்கும் நினைவுக்கும் அப்பாற்பட்டு (கடந்து) மறைபொருளாய் நிற்பவனே!

(கு-ரை) : நாற்றம் -மணம். நேரியாய் - நுட்பமாய்ப் பொருந்தியவனே. சேயாய் - தொலைவில் இருப்பவனே. நணியாய் - அருகில் இருப்பவனே. மாற்றம் - சொல். மறையோன் - மறைந்து நிற்பவன். வேதப் பொருளாக இருப்பவன்.

46-50. (பொழிப்புரை) : கறந்த பாலில் சருக்கரையும் தேனும் கலந்தாற் போல, அன்பிற் சிறந்த அடியவர்களின் உள்ளத்தில் தேன் போல் இனிமையாக ஊறி நிலை பெறத்தங்கி எடுத்த பிறவியை ஒழிக்கின்ற எங்கள் பெருமானே! மண், புனல்,. அனல், கால், வான் என்னும் ஐம்பெரும் பூதப் பொருள்களிலும் இரண்டறக்கலந்து நிற்றலால், பொன்மை வெண்மை செம்மை கருமை புகைமை என்னும் ஐந்து நிறங்களையுடைய எம்பெருமானே! தேவர்கள் போற்றவும், நீ அவர்களிற்கு வெளிப்படாமல் மறைந்திருந்தாய்.

(கு-ரை) : கன்னல் - கரும்பு; சருக்கரை. 'வல்வினை யேன்றன்னை' என்பது பின்னர் வரும் தொடரோடு இயைத்துப் பொருளுரைக்கப்பட்டது.



50-61. (பொழிப்புரை) : குற்றமற்றவனே! நீ பெரும்பாவியேனை என்னறிவு மறையும்படி மூடிய ஆணவமாகிய இருள்மலத்தை மாய்விக்கும் படியாக, நல்வினை தீவினை என்னும் வலிமையான கயிற்றினால் கட்டி, வெளியே தோலைப் போர்வையாக அமைத்து எல்லா இடங்களிலும் உள்ள புழுக்களும் அழுக்குக்களும் தெரியாமல் மறைத்து, அழுக்கு வடிகின்ற ஒன்பது வாயில்களை உடைய உடல் ஆகிய குடிசையைக் கொடுத்து உதவி செய்து, யான்மயங்கி வருந்தும்படி புலன்கள் ஐந்தும் மாயச்செயல்களைச் செய்ய, அவற்றை எதிர்த்துத் தடுக்கும் மனத்தோடு உன்னிடத்துக் கலந்த அன்புடையவனாகி நெகிழ்ந்து உள்ளே உருகும் நற்பண்பு சிறிதும் இல்லாத சிறியேனை உய்வித்தற்கு இந் நிலத்தின் கண்ணே குருவடிவில் வந்து அருள் செய்து, பெருமை மிக்க திருவடிகளையும் காட்டி நாயினும் இழிவாய்க் கிடந்த எளியேனுக்குத் தாயினும் சிறந்த அருள் வள்ளலான மெய்ப் பொருளே!

(கு-ரை) : விமலா - குற்றம் (பாசக்கட்டு) அற்றவனே.மலங்க மயங்க.விலங்கு-தடை செய்கின்ற. தத்துவன்-உண்மையானவன்.நலம் - நல்வினை. தயா-தயை,அருள்.குடில் - குடிசை.இருளை மாய - இருள் மலம் எனப்படும்

ஆணவமல வலிமை மாய்விக்க,மாய:- பிறவினைப் பொருளில் வந்த வினையெச்சம்.'குடிலை நல்கி' எனக் கொண்டு கூட்டி யுரைக்க.

62–66.(பொழிப்புரை) குற்றம் இல்லாத ஒளி விரிந்த மலரின் சுடரே! ஒளி வடிவினனே! இனிமை நிறைந்த அமுதமே! சிவபுரத்தின் தலைவனே! மும்மலம் ஆகிய பாசங்களின் தொடர்பை நீக்கி,என் அறிவை வளர்க்கும் ஆசிரியனே! அன்பினாற் பெரிதும் அருளைச் செய்து,என் நெஞ்சில் இருந்த வஞ்சகங்கள் கெடும்படி அதனை விட்டு அகலாமல் நிலையாகத் தங்கிய பெரிய அருள் வெள்ளப் பெருக்காகிய நதியே!

67–70.(பொழிப்புரை):தெவிட்டாத அமுதமே! அளவுக்குள் அடங்காத பெருமையை உடையவனே! ஆராய்ந்து தியானிக்காதவர்களின் உள்ளத்தில் வெளிப்படாமல் மறைந்துவிடுகின்ற ஞானமாகிய ஒளியாகத் திகழ்பவனே! நீரைப்போல என் நெஞ்சத்தை உருகச்செய்து,என் உயிர்க்குயிராய் நிற்பவனே!



இருவினைப் பயனாகிய இன்பமும் துனபமும் இயல்பாக இல்லாதவனே!
தம் செயலற்ற ஞானிகளின் இன்ப துன்பங்களை உன்னுடையவதாகக் கொள்பவனே!

71-76. (பொழிப்புரை): அன்புடையவர்களுக்கு அவர்களினும் மிக்க அன்பையுடையவனே! எல்லாப் பொருள்களுமாய், அவையல்லாது வேறுமாய் நிற்கும் சோதிவடிவினனே! செறிந்த இருளாக இருப்பவனே! எளிதில் விளங்காத பெருமையுடையவனே! எல்லாவற்றிற்கும் முதலாக இருப்பவனே! முடிவும் நடுவும் ஆக விளங்கி அவை அல்லாதவனுமாகத் திகழ்பவனே! வலிய இழுத்து என்னை அடிமை கொண்ட எம் தந்தையாகிய சிவபெருமானே! கூரிய சிவஞானத்தினால் அன்பு கொண்டு உணர்பவர்கள், தமது மனத்திலே தற்போத முனைப்பால் அறிதற்கரிய ஞேயமாகிய பரம்பொருளே! உயிரின் சுட்டுணர்வாகிய நுண்ணறிவிற்கு எட்டாத பேரின்ப அனுபவத்தைத் தரும் பொருளே!

77-83. (பொழிப்புரை) : இறப்பும் பிறப்பும் வாழ்தலும் இல்லாத தூய பரம்பொருளே! எல்லாவற்றையும் எல்லோரையும் காக்கின்ற எங்கள் அரசனே! காண்பதற்கு அரிய பெரிய ஒளியே! ஆறு போலப் பெருகும் இன்பமாகிய வெள்ளமே! அப்பனே! யாவர்க்கு மேலானவனே! நிலை பெற்ற அழகுமிக்க சுடரும் ஒளியாயும், சொல்லுவதற்கு இயலாத நுண்ணிய உணர்வாயும் சடமும் சித்துமாக மாறுபட்ட பொருள்களையுடைய இவ்வுலகத்தின் கண், வேறு வேறாக வந்த தசகாரிய விளக்க அறிவாயும் விளங்கித் தெளிவைத் தருபவனே! ஊற்றைப் போலச் சுரக்கின்ற உண்பதற்கினிய அரிய அமிழ்தம் போல்பவனே! எப்பொருட்கும் எவ்வுயிர்க்கும் உரிய தலைவனே!

84-89. (பொழிப்புரை) : வேறு வேறு மாறுபாடுகளை அடைகின்ற, தசையால் ஆகிய இவ்வுடம்பின் உள்ளே அடைபட்டுக்கிடத்தலை. இனியும் யான் பொறுக்கமாட்டேன். எங்கள் தலைவனே! தீவினைகளை அழிப்பவனே! நினக்கு அடைக்கலம் என்று அலறிக்கதறிப் போற்றியும் புகழ்ந்தும் தியானத்தில் இருந்து, பொய்ம்மைகள் அழிந்து மெய்யருள் நிலையைப் பெற்றவர்கள் மறுபடியும் இவ்வுலகின் கண்வந்து வினைவயப்பட்ட பிறவியை அடையாதபடி வஞ்சகம்



மிகுந்த ஐம்புலன்களின் வீடாகிய இவ்வுடம்பின் கட்டினை அழிக்கவல்லவனே! நடு இருளிலே இடைவிடாமல் நடனம் இயற்றும் தலைவனே.

(கு-ரை) : விகாரம் - மாறுபாடு. விடக்கு - தசை. ஆற்றேன் - பொறுக்கமாட்டேன். மீட்டு - மறுப்படியும். குரம்பை - சிறிய வீடு.

90-95. (பொழிப்புரை) : தில்லைச்சிற்றம்பலத்தில் கூத்தாடுபவனே! தெற்கே உள்ள பாண்டி நாட்டை உடையவனே! துன்பத்தை விளைவிக்கின்ற பிறவியின் வேரை அறுப்பவனே! உனக்கு அடைக்கலம் என்று அரற்றி, அளவிட்டுச் சொல்லமுடியாத புகழை உடயவனை இயன்ற அளவில் புகழ்ந்து துதித்து, அவனது திருவடிக்கீழ் இருந்து சொல்லிய சிவபுராணம் என்னும் இச் செய்யுளின் பொருளை உனர்ந்து ஓத வல்லவர்கள், சிவபுரமாகிய சிவலோகத்தின் கண்னே செல்வார்கள். அங்கே தம்மைப் பலரும் புகழ்ந்து போற்றத் தாம் சிவபிரானைப் பணிந்து அவனது திருவடியின் கீழ் இன்புற்று இருப்பார்கள்.

(கு-ரை) : சிவபுரம் - சிவலோகம், முத்தியுலகம்.

உ

## போற்றித் திருத்தாண்டகம்.

அப்பர் சுவாமிகள் திருக்கயிலாய தரிசனம் செய்ய மிகச் சிரமத்தோடு அங்கம் தேய்ந்து வருந்திச் செல்லுங்கால், இறைவர் முனிவர் வடிவங்கொண்டுவந்து, சிவதொண்டு நிற்றலின் உறுதியை அறிந்து, அருகிலுள்ள பொய்கையைக்காட்டி "இப் பொய்கையில் மூழ்கி எழுந்து கயிலாயக் காட்சியினைத் திருவையாற்றில் காண்" என்று கூறி மறைந்தார். அப்பரும் அவ்வண்ணம் அக்குளத்தில் மூழ்கி எழுந்து கயிலாயக் காட்சியினைக் கண்டு தொழுது பாடியருளிய அற்புதமான பதிகமாகும் இது. இதைப் போலப் போற்றிப் பதிகங்கள் பல இருப்பினும் அகத்தியர் தேவாரத் திரட்டினுள் அருச்சனைக்கு இத் திருப்பதிகமே தேர்ந்தெடுத்து வைக்கப்பட்டுள்ளது. எனவே தினமும் இப் பதிகத்தைப் பாராயணம் செய்யும் அன்பர்கள் மன அமைதியும், தீவினையகலலும் பெற்றுப் பதி புண்ணியத்தையும் எய்துவர்.

1. வேற்றாகி - வேறாய பூதங்களாகி, ஓவாத - அழியாத, ஆற்றாகி - உபசாந்தமாகி, தணிவாகி.



2. பிச்சாடல் - பித்தர்கள் ஆடல், வைச்சாடல் - (வைத்து +ஆள்+ தல்) - திருவடிக்கீழ் இருத்தி ஆட்கொளஸ். பொய்ச்சார் - பொய்த்தார், நின் அன்பினை விட்டவர்.
3. ஊனத்தை நீக்கு முடலே - குற்றத்தை நீக்கி ஆழும் திருவுரு.
4. தேனத்தை + வார்த்த+ தெளிவே - தேனை வடித்த தேன் தெளிவே. கானம் - ஈமக்காடு.
5. பேராகி - பெருவடிவாகி, - விஸ்வரூபமாகி, நேர்வார் - ஒப்பார். கார் - கருமை.
6. சில் - அணு, புல் - உயிர், புல்லாகிய உயிர் பூட்சி - உடம்பு. உணவு, பூணப்படுவது.
8. அமையா - அடங்கா. கமை - (சஷமை) பொறுமை.
10. கண் - மற்றுமுள்ள இடம்.
அடியும் முடியும் இகலி - (பிரம விட்டுணுக்கள்) அடி முடி அறியும் பொருட்டு தம்முள் பகைத்து

உ

சுந்தர மூர்த்தி சுவாமிகள் அருளிய
திருத்தொண்டத் தொகை.

இப்பதிகம், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஒருமுறை திருவாரூர்ப் பூங்கோயிலை அடைந்த போது தேவாசிரிய மண்டபத்தில் எண்ணிலாத சிவனடியார்கள் கூடியிருக்கக் கண்டு "இவர்களுக்கு யான் அடியன் ஆகும் நாள் எந்நாள்" என்று எண்ணுகையில் சிவபெருமான் "தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என்று முதலடி எடுத்துக் கொடுக்க அப்போது ஓதியருளியதாகும். மாகேசுர பூசை வேளைகளில் ஓதுதல் நன்று.

உ

தையல் நாயகித் தாயே,
இது நல்ல தருணம் அம்மா
வையம் புகழும் வண்ணைமாநகரில்,
வந்தவாமியே சிவகாமியே
கந்த சாமியைத் தந்த,
தையல்நாயகித் தாயே.
இது நல்ல தருணம் அம்மா.



உ

# விநாயகர் காரியசித்தி மாலை

திருச்சிற்றம்பலம்



இந்தக் காரிய சித்திமாலையைக் காலை, மதியம், மாலையாகிய மூன்று வேளைகளிலும் விநாயகரை எண்ணிப் பாடுபவர்களிற்கு நினைத்த காரியம் கைகூடும்.

சதுர்த்தி விரத தினத்தன்று பாடினால் அட்டமா சித்திகளும் பெற்று இன்புற்று வாழ்வர். இன்பமே சூழ்க. எல்லோரும் வாழ்க.

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் யானை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

1. பந்தம் அகற்றும் அநந்த குணப்
பரப்பும் எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி இருந்து கரக்குமோ
சந்த மறை ஆகமங்கலைகள்
அனைத்தும் எவன்பால்தக வருமோ
அந்த இறையாம் கணபதியை
அன்பு கூரத் தொழுகின்றோம்.

2. உலகம் முழுதும் நீக்கமற
ஒன்றாய் நிற்கும் பொளெவெனவ்
வுலகிற் பிறக்கும் விகாரங்கள்
உறாத மேலாம் ஒளியாவான்?
உலகம் புரியும் வினைப்பயனை
ஊட்டுங் களைகண் எவன் அந்த
உலக முதலாங் கணபதியை
உவந்து சரணம் அடைகின்றோம்.

3. இடர்கள் முழுவதும் எவனருளால்
எரிவீ ழும்பஞ் செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க் கூன்றிக்
கருமம் எவனால் முடிவுறும் அத்
தடவு மருப்புக் கணபதிபொன்
சரணம் சரணம் அடைகின்றோம்.

4. மூர்த்தி யாகித் தலமாகி
முந்நீர் கங்கை முதலான
தீர்த்தமாகி அறிந்தறியாத்
திறத்தினாலும் உயிர்க்கு நலம்
ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றி அறிவிப்பான எவன் அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.



5. செய்யும் வினையின் முதல்யாவன்
செய்யப் படும்அப் பொருள்யாவன்
ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன்யாவன்
உய்யும் வினையின் பயன் விளைவில்
ஊட்டி விடுவிப்பான்எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றோம்.

6. வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடனம் நவிலும்
விமலன் யாவன் விறங்குவர
நாத முடிவில் வீற்றிருக்கும்
நாதன் எவன்எண்குணன் எவன்அப்
போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.

7. மண்ணின் ஓர்ஐங் குணமாகி
வதிவான் எவன்நீர் இடைநான்காய்
நண்ணி அமவர்வான்எவன் தீயின்
மூன்றாய் நவில்வான் எவன்வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி
இயைவான் எவன்வான் இடை ஒன்றாம்
அண்ணல் எவன் அக்கணபதியை
அன்பிற் சரணம் அடைகின்றோம்.

8. பாச அறிவில் பசு அறிவில்
பற்றற் கரிய பரன்யாவன்?
பாச அறிவில் பசு அறிவும்
பயிலப் பணிக்கும் அவன்யாவன்?
பாச அறிவும் பசு அறிவும்
பாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன் அக் கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றோம்.

திருவுங் கல்வியுஞ் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.






## அப்பப்பா என்றழைக்க யாருமில்லை இனி யாரை அப்பப்பா என்று அழைப்போம்?

முதுமொழிகள் எமக்குக் கூறும் ஆசானாகத் திகழ்ந்தீர்கள்
இனி எமக்கு யார் அறிவுரைகள் கூறுவர்?
வீட்டில் நடைபெறும் விசேஷங்களுக்கு
பிள்ளையார் சுழி போட்டீர்கள்
இனி எம் விசேஷங்களை யார் தொடக்கி வைப்பார்?

வெறிச்சோடிக் கிடக்கும் உங்கள் கட்டிலும்
கதிரையும் பார்ப்பதற்கு உங்கள் நினைவே தோன்றுகிறது.
எங்களைக் கண்டவுடன் குதூகலிக்கும் அப்பப்பாவே
எம்மைவிட்டு வெகுதூரம் சென்றீரோ?
தனிமையில் உம்மை நினைத்து உருகும்
அப்பம்மாவை தேற்றுவது யார்?

நீங்கள் பிறந்தபோது நீங்கள் மட்டும்தான் அழுதீர்கள்
ஆனால் நீங்கள் போகும்போது எங்கள்
அனைவரையும் அழவைத்தீர்கள்
நீங்கள் கடைக்குச் சென்றபோது இனிப்புக்காக
காத்திருந்த பேரப்பிள்ளைகள் - நாம்
இன்று இறைவனிடம் சென்ற உங்கள்
ஆசிக்காக காத்திருக்கின்றோம்.

**பேரப்பிள்ளைகள்**





சிந்தைக்கினிய செயற்கினிய சீமான்

விந்தை விளக்காக வீற்றிருந்தான் ' நொந்துமனம்

வாடிக் கலங்க வானுலகுக்கேகினானே

கூடித்துயரடைய விட்டு.

# நன்றி நவிலல்



என்றும் எம் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து எங்கள் இதயங்கள் யாவிலும் நீங்காத நினைவுடன் வாழ்ந்துகொண்டிருக்கும் எம்தெய்வம், 30.11.2006 அன்று அமரத்துவம் அடைந்த

**அமரர். கணபதிப்பிள்ளை குமாரசேகரம்**

அவர்கள் சிவபதமடைந்ததை அறிந்து உடன் வந்து உதவிகள் புரிந்தோர்க்கும், அன்னாரது இறுதிக் கிரியை களில் பங்குகொண்டவர்களுக்கும், இரங்கற் செய்தி களை தொலைபேசி, தந்தி, அஞ்சல் மூலமும் நேரிலும் வந்து தெரிவித்தவர்களுக்கும், அந்தியேட்டிக் கிரியை களிலும், இன்று நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியை களில் பங்குகொண்டு அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கே.கே.எஸ் வீதி,
இணுவில் கிழக்கு,
இணுவில்.

இங்ஙனம்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்